Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50
பக்கங்கள் 16

சுடர் : 38
கதிர் : 109

புதன்கிழமை 15 மார்ச் 2023

பங்குனி 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

புதன் பொய்கை

# அரசாங்கத்துக்கு எதிராக இன்று நாடளாவிய பணிப்புறக்கணிப்பு

## கல்வி, தபால்,சுகாதார சேவைகள் முடங்கும்

கொழும்பு, மார்ச் 15

அரசாங்கத்துக்கு எதிராக இன்றையதினம் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறவுள்ளது. இதனால், கல்வி, தபால், சுகாதாரம் உள்ளிட்ட முக்கியமான துறைகள் முடங்கும் என்று தெரியவருகின்றது. »15

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டால் சட்டநடவடிக்கை உடனே பாயும்!

### அத்தியாவசியத் துறையினருக்கு அரசாங்கம் பகிரங்க எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 15

அத்தியாவசியத் துறைகளைச் சேர்ந்தோர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டால், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித் »15

## ஜன்னல் உடைத்து நகைகள் திருட்டு!

யாழ்., மார்ச் 15

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பகுதியிலுள்ள வீடு »15

## ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறாது

### அமைச்சர் ஹரின் உறுதி

கொழும்பு, மார்ச் 15

உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இடம்பெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், அந்தத் திகதியில் தேர்தல் நடைபெறாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் அமைச்சர் ஹரின் »15

## போராட்டத்துக்கு ஆதரவில்லை!

### தனியார் பேருந்துச் சங்கம் அதிரடி

கொழும்பு, மார்ச் 15

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை. மாத வருமானம் பெறும் அரச ஊழியர்களால் போராட்டத் »15

நேற்று நாடளாவிய ரீதியில்

## தொழிற்சங்க நடவடிக்கை சுகாதாரத்துறை முடக்கம்

விரிவு:- பக்.15






# தொழிற்சங்கங்களின் போராட்டம் சுயலாப நோக்கிலானவையே!

## தொழிலாளர்கள் உணர வேண்டும் என்றார் சுனில்த சில்வா

**கொழும்பு, மார்ச் 15**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைத் தடுப்பதற்கான சதித்திட்டமே தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தப் போராட்டம். அவர்கள் தன்னலம் கருதியே பகிஷ்கரிப்பு போராட்டங்களை மேற்கொள்கின்றனர். இதில் சாதாரண தொழிலாளர்கள் சிக்கிக்கொள்ளக்கூடாது.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சித் தேசிய சேவை சங்கத்தின் உபதலைவர் சுனில்த சில்வா தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிற்சங்கங்கள் எப்போதும் தமது கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ளவே பகிஷ்கரிப்பு போராட்டங்களை மேற்கொள்கின்றன. தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களின் சொந்தத் தேவைகளுக்காக தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுக்கும் நிலையே இருந்து வருகிறது. இதனால் சாதாரண தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றனர். எதற்காக போராட்டம் மேற்கொள்கிறோம் என அதிகமான தொழிலாளர்கள் தெரியாதுள்ளனர்.

தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம், சர்வதேசநாணய நிதியத்திடமிருந்து கிடைக்க இருக்கும் கடன் உதவியை தடுப்பதற்கான சதித்திட்டமாகும்.

இந்த நிதி உதவி கிடைக்காவிட்டால் சாதாரண மக்களுக்கு கிடைக்க இருக்கும் நிவாரணங்கள் இல்லாமற்போகும். அதனால் சாதாரண தொழிலாளர்கள் இதில் சிக்கிக் கொள்ளக்கூடாது. போராட்டத்திலிருந்து விலகிக்கொள்ளவேண்டும். மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற ஒரு லட்சத்துக்கும் அதிக சம்பளம் பெறுபவர்களிமிருந்தே வரி அறவிடப்படுகிறது. இந்த வரிப்பணம் நாட்டு மக்களையே சென்றடைகிறது.

போக்குவரத்து, தபால்துறை புகையிரத சேவை போன்ற தொழிற்சங்கங்களும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் பங்கேற்க தீர்மானித்து வருகின்றன. இதனால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலையும்.

தொழிற்சங்கங்களுக்கு பிரச்சினைகள் இருக்கலாம். அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண தேசிய சேவை சங்கம் தயாராகவே இருக்கிறது.

சர்வதேச நாணய நிதி கிடைக்கும் தறுவாயில் - நாடு வங்குரோந்து நிலையிலிருந்து மீளும் நிலையில் இத்தகைய போராட்டங்கள் மேலும் அதலபாதாளத்தில் தள்ளவே வழிவகுக்கும் - என்றார். (ச-இ)

## மக்களைக் கேலிக்கூத்தாக்கும் தேர்தல் ஒத்திவைப்பு நாடகம்

### அநுர திஸாநாயக்க காட்டம்



கொழும்பு, மார்ச் 15

நாட்டு மக்கள் தேர்தலை விரும்பவில்லை - நாட்டு மக்களுக்கு தேர்தல் அவசியமில்லை எனக் கூறும் ஆளும் தரப்பினர் ஒட்டு மொத்த மக்களை கூட்டி குறிப்பிட முடியுமா? மக்கள் கோரும் போது தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஒன்றும் கேலிக்கூத்து அல்ல, மக்களாணையை அரசாங்கம் மலினப்படுத்துகிறது.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

நாட்டுமக்கள் தேர்தலை கேட்கவில்லை என ஆளும் தரப்பினர் நாடாளுமன்றத்தில் குறிப்பிடுகிறார்கள். நாட்டு மக்களுக்கு தேர்தல் அவசியமில்லை என்பதை ஒட்டுமொத்த மக்களையும் கூட்டி அவர்கள் நிரூபணம் செய்யட்டும். படுதோல்வி அடைவது நிச்சயம் என்பதாலேயே உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனாதிபதி இழுத்தடிப்புச் செய்கிறார். ராஜபக்சக்களின் ஆட்சியை 20 வருடத்துக்கு அசைக்க முடியாது என்று சூழ்ந்திருந்தவர்கள் புகழ்பாடினார்கள். இறுதியில் நேர்ந்தது என்ன? அதனை ஜனாதிபதியும் உணர வேண்டும் - என்றார். (ச-இ)

### தொழிற்சங்கப் போராட்டத்துக்கு

## கிளிநொச்சியில் அனைத்து கல்வித்துறைகளும் ஆதரவு

கிளிநொச்சி, மார்ச் 15

நாடளாவிய ரீதியில் இன்று முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர் ஆலோசகர் சங்கம், அதிபர் சங்கம் மற்றும் இலங்கை தமிழ் ஆசிரிய சங்கம் என அனைத்துக் கல்வித்துறைகளும் தமது ஆதரவை வழங்கியுள்ளன.

தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அனைத்துத் துறைகளும் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தன.

போராட்டம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய ஆலோசகர் சங்கச் செயலாளர் ரி.நிகேதன் தெரிவித்ததாவது:

இன்று முன்னெடுக்கப்படுகின்ற அடையாள பகிஷ்கரிப்பை கிளிநொச்சி மாவட்டத்தினுடைய ஆசிரிய ஆலோசகர் சங்கம் தேசிய ஆசிரிய ஆலோசகர் சங்கத்தோடு இணைந்து மேற்கொள்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலான ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்கள். அவர்களுக்கு ஏற்படுகின்ற போக்குவரத்துச் செலவு, தங்குமிடம் உள்ளிட்டவை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் அவர்களுக்கு பெரும் சுமையை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. அத்துடன் மாணவர்கள் கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதென்பது இயலாத ஒன்றாக இருக்கின்றது. இந்த நிலையிலிருந்து மீளவேண்டும் என்ற நோக்கத்தோடு அனைவரும் இணைந்து போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகிறோம் - என்றார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட சங்கச் செயலாளர் ரி.சிவரூபன் தெரிவித்ததாவது:

15ஆம் திகதி (இன்று) முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்துக்கு கல்வித்துறை சார்ந்த அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். 8 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றது. 40 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளோம். எமது கோரிக்கைகளை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பு இடம்பெறுமாக இருந்தால், தொழிற்சங்க நடவடிக்கையின் அடுத்த கட்டத்துக்கு தள்ளப்படுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றார். (எ-14,113)

## நீதிமன்றின் இடைக்காலத் தடை நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல்

### பிரேரணை கொண்டுவர தீர்மானம்

கொழும்பு, மார்ச் 15

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இந்த உத்தரவு ரத்து செய்யப்படவேண்டும் என வலியுறுத்துகிறோம்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் குறிப்பிடுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது. இதனால் நிறைவேற்று அதிகாரம் சட்டவாக்கத்தை பலவீனப்படுத்துவதை உயர்நீதிமன்றம் தடுத்துள்ளது. உயர்நீதிமன்றத்தின் தடையுத்தரவால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. இது முற்றிலும் வெறுக்கத்தக்கது.

சிறப்புரிமை மீறல் தொடர்பில் நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் தொடர்பான குழு ஒரு தீர்மானத்தை எடுக்கும்வரை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள இடைக்காலத் தடையுத்தரவை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட வேண்டும் என சபாநாயகரிடம் நிதி இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சிறப்புரிமை தொடர்பான பிரச்சினையை சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் தொடர்பான குழுவுக்கு சமர்ப்பிக்காமல், இரத்துச் செய்யுமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தவுள்ளோம். சகல எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் ஒன்றிணைத்து உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைக்கான நிதி விடுவிப்பு பிரேரணையை கொண்டுவர தீர்மானித்துள்ளோம் - என்றார். (ச-இ)

## நகைக்கடை உரிமையாளர் நேற்று உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் பிரபலமான நகைக்கடை ஒன்றின் உரிமையாளர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்தார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது மனைவி உள்ளிட்ட குடும்பத்தவர்கள் கொழும்பில் வசித்துவந்த நிலையில், குறித்த நகைக்கடை உரிமையாளர் வழமைபோன்று மதிய உணவருந்த யாழ்.நகரை அண்மித்த பகுதியில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். எனினும் உணவை அருந்தாமல், தனது அறைக்குச் சென்று கதவையும் பூட்டிவிட்டார். நீண்டநேரமாகியும் அவர் அறையில் இருந்து வெளியே வராததால் வீட்டுக்கு வருகைதந்த உறவினரொருவர் அறையைத் திறந்து பார்த்த போதே, அவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்த விடயம் தெரியவந்தது.

இதுகுறித்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தை மீட்டு போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

(அ-ம-26,23,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு 10 வழிகாட்டல் பரிந்துரைகள்

### கோப் குழுவால் முன்வைப்பு

கொழும்பு, மார்ச் 15

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு 10 வழிகாட்டல் பரிந்துரைகளை கோப் குழு முன்வைத்துள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அறிக்கை இதுவரை நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படாமை நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்கும் செயற்பாடாக கருதப்படும். ஆகவே காலதாமதமாகியுள்ள சகல அறிக்கைகளும் ஒரு மாத காலத்துக்குள் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப்குழு அதன் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்தவாரம் கூடியது. இந்தக் கூட்டத்தில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கடந்த கால அறிக்கைகள் செயலாற்றுகை தொடர்பில் ஆராயப்பட்டன. அதற்கமைய 10 வழிகாட்டல் பரிந்துரைகள் கோப் குழுவால் முன்வைக்கப்பட்டது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் இதுவரை காலதாமதமாகியுள்ள அனைத்து வருடாந்த அறிக்கைகளையும் ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கீழ் மாலைதீவு மற்றும் சீஷெல்ஸில் உள்ள பெரும் நிதி இழப்பை சந்தித்துள்ள இரண்டு கிளைகளை முறையாக மூடுவதற்கு வெளிவிவகார அமைச்சுக்கு அவதானிப்புகளை அனுப்ப நடவடிக்கையை மேற்கொள்ளல்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஜனாதிபதி செயலகத்தினால் தற்போது பயன்படுத்தப்படும் காணி மற்றும் கட்டடம் தொடர்பான குத்தகை ஒப்பந்தம் தொடர்பில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புடைய போலி தரகர்களுக்கு எதிரான குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையிடல் வேண்டும்.

நீண்டகால காப்பீட்டு வணிகம் மற்றும் பொதுக் காப்பீட்டு வணிகம் இரண்டையும் தனித்தனி நிறுவனங்களாகப் பிரிப்பது குறித்து நிதியமைச்சின் செயலாளர் விரைவில் தீர்மானிக்கவேண்டும்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் எதிர்கால சந்தைப்படுத்தல் மூலோபாயத் திட்டங்கள் குறித்த அறிக்கையிடல்.

காப்புறுதி இழப்பீட்டைப் பெறுவதற்கான நடைமுறை குறித்து காப்புறுதியாளர்களுக்கு முறையாக அறிவிக்க நடவடிக்கை எடுத்தல்.

கூட்டுத்தாபனத்தின் மொத்த மனித வளத்தை கணக்காய்வு செய்து ஆறு மாதங்களுக்குள் குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்தல்

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் விலைமனுக் கோரி அமைச்சரவையின் அனுமதியுடன் தனி தரப்பினரிடமிருந்து 100 டொலர் விலைமனுப் பெறுமதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்புடைய அரேபிய நாடுகளிலுள்ள வெளிநாட்டுப் பணியாளர்களுக்கான காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்தியமை மற்றும் அது சம்பந்தமாக கூட்டுத்தாபனத்தின் வகிபங்கு குறித்து விளக்கமளிக்கப்படல் உள்ளிட்ட 10 பரிந்துரைகளை கோப் குழு பரிந்துரைத்தது. (ச-இ)

## ஐ.எம்.எப். நிபந்தனை எதிரொலி

# ஊழல் எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு அனுமதி வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 15

**தேசிய ஊழல் ஒழிப்புச் சட்டவரைவை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த மாநாட்டின்போதே அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஊழல் எதிர்ப்பு சட்டவரைவை தயாரிப்பதற்காக கடந்த ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட வரைவுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கைக்கு கடனுதவி கிடைப்பதற்கு ஏதுவாக நிதி தொடர்பான விடயங்களில் வெளிப்படைத்தன்மை பேணப்படுவதற்கு தேசிய ஊழல் ஒழிப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற நிபந்தனையை சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ளது. (ச-44)

## கைவிடப்படும் சிசுக்களை பொறுப்பேற்க நிலையம்!

### அமைச்சரவைக்கு யோசனை

கொழும்பு, மார்ச் 15

பெற்றோரால் கைவிடப்படுகின்ற சிசுக்களைப் பொறுப்பேற்பதற்கான நிலையத்தை உருவாக்குவதற்கான யோசனையை விரைவில் அமைச்சரவைக்கு மீள சமர்ப்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளதாவது:-

அண்மையில் கோட்டை ரயில் நிலையத்தில் புகையிரத கழிவறையில் குழந்தையொன்று கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் பல நாட்டில் கடந்தவாரம் பதிவாகியுள்ளன.

குழந்தை பெற்றுக் கொள்ளும் பெற்றோர் அதனை தம்மால் வளர்க்கமுடியாது என்ற நிலைமை ஏற்படும் போது குழந்தைகளை கைவிட்டுச் செல்கின்றனர். மேற்குலக நாடுகளிலுள்ள மருத்துவமனைகளில் நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு குழந்தைகளை பெறுவோர் தம்மால் அதனை வளர்க்க முடியாது எனக் கருதும் பட்சத்தில் அந்த நீதிமன்றத்தின் ஊடாக எவ்வித விவரங்களோ தகவல்களோ வெளியிடப்படாமல் குழந்தைகளை மருத்துவமனையில் ஒப்படைக்க முடியும்.

அவ்வாறான முறைமை இலங்கையிலும் அறிமுகப்படுத்த கடந்த 2022 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துக்காக யோசனை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் அமைச்சரவையுடன் தொடர்புடைய சட்ட அதிகாரியினால் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்தநிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி, விலைவாசி உள்ளிட்டவற்றால் குழந்தைகள் மீதான வன்முறைகள் அதிகளவில் பதிவாகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் மீள அமைச்சரவைக்கு இதுதொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

## பாணின் விலை மேலும் குறையும்

கொழும்பு, மார்ச் 15



பாணின் விலையை மேலும் குறைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்ததையடுத்து கோதுமை மா இறக்குமதி நிறுவனங்கள் அண்மையில் கோதுமை மாவின் விலையை 15 ரூபாவால் குறைத்தன.

அதனையடுத்து 450 கிராம் நிறையுடைய பாண் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டது.

இந்தநிலையில் டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்து வருகின்றமையால் பாணின் விலையை மேலும் குறைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன

அதேவேளை மொத்த விற்பனையில் முட்டை ஒன்றின் விலை 56 ரூபாவால் அதிகரித்துள்ளமையால் உற்பத்திகளை மேற்கொள்ள பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன குறிப்பிட்டார். (ச-இ)

## மாடுகள் திருட்டு: இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 15

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் பகுதியில் மாடுகள் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர் என்று அச்சுவேலிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளனர்.

புத்தூர் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மாடுகளைக் கொண்டுசென்றபோதே அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேட புலனாய்வுப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14,23)

## முதலிரண்டு மாதங்களில் 8,500 கைபேசிகள் மாயம்!

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் 8 ஆயிரத்து 422 திறன்பேசிகள் இந்த வருடத்தின் முதலிரு மாதங்களில் திருடப்பட்டுள்ளன அல்லது தொலைந்து போயுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொலைந்த தொலைபேசிகளை மீட்பதற்காக பொலிஸாரால் 2018 ஆம் ஆண்டு இறுதியில் இணைய வழி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முறைமையி னூடாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு இதுவரை ஒரு லட்சத்து 34 ஆயிரத்து 451 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 2019 இல் 40 ஆயிரத்து 167 கைபேசிகளும் 2020 ஆம் ஆண்டில் 12 ஆயிரத்து 567 கைபேசிகளும் 2021 ஆம் ஆண்டில் 27 ஆயிரத்து 933 கைபேசிகளும் திருடப்பட்டுள்ளன அல்லது தொலைந்து போயுள்ளன.

இந்த வருடத்தின் முதலிரு மாதங்களில் மாத்திரம் 8ஆயிரத்து 422 திறன்பேசிகள் களவாடப்பட்டுள்ளன அல்லது தொலைந்துள்ளன என ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரன தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை, சோளச்செய்கை காட்டு யானைகளால் நாசம்

முறைப்பாடு வழங்கியும் நடவடிக்கையில்லை என விசனம்

கண்டாவளை - வண்ணாத்தியாறுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த தென்னை, சோளச்செய்கைகளை காட்டுயானைகள் முற்றுமுழுதாக அழித்துள்ளன. இதுதொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு முறையிட்டும் இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்று கிராமமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வண்ணாத்தியாறுப் பகுதியில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்ட 22 தென்னை மரங்களையும் சோளச் செய்கையையும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை புகுந்த காட்டு யானைகள் முற்றுமுழுதாக அழித்துள்ளன. காட்டுயானைகளின் அச்சத்தால்வியாபாரிகள் உள்ளிட்ட பலர் தமது அன்றாட நடவடிக்கைகளுக்காக வெளியே செல்லமுடியாமல் உள்ளனர் என அந்தக் கிராமமக்கள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14,113)

## குடிநீர் பவுஸர் மீது தாக்குதல் சந்தேகநபரொருவர் கைதானார்

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஊர்காவற்றுறை- நாரந்தனைப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகம் செய்யும் பவுஸர் மீது கடந்த வியாழக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், தாக்குதலை மேற்கொண்ட நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேலணை ஏழாம் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த நபரொருவருக்குச் சொந்தமான குடிதண்ணீர் விநியோக பவுஸரின் கண்ணாடிகளை, நபரொருவர் அடித்து நொருக்கி சேதப்படுத்தியிருந்தார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கமைய நாரந்தனை வடக்குப் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-14,23)


## கண்ணீர் அஞ்சலி



எடிசன் அக்கடமி ஸ்தாபகரும் புகழ் பூத்த கணித ஆசானுமான

**திரு.B.P.பாஸ்கரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முன்னைநாள் எடிசன் அக்கடமி
யாழ். இந்துக் கல்லூரி
ஆசிரிய நண்பர்கள்.

(CS 239811)-6


# வாக்குச்சீட்டு அச்சிடும் பணிக்கு அச்சகத் தலைவரே முட்டுக்கட்டை

### அரச அச்சக திணைக்கள சேவைகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 15

**தேர்தலுக்கு வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளுக்கு நிதி ஒரு தடையில்லை. ஆயினும் முரண்பட்ட இருவேறுபட்ட கருத்துக்களை முன்வைத்து அச்சகத் தலைவர் வேண்டுமென்றே வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை தாமதப்படுத்துகிறார் என அரச அச்சகத் திணைக்கள சேவைகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

அரச அச்சகத் திணைக்களத் தலை வருடன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பேச்சில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அரச அச்சகத் திணைக்கள சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அசங்க சதுருவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:- வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளில் ஈடுபட சகல ஊழியர்களும் தயாராக உள்ளார்கள். ஆனால் அரசியல் அழுத்தம் காரணமாக வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தபால் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்தவும் பொது வாக்கெடுப்பை ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடத்தவும் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஆனால் வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் போது ஒரு ரூபா முற்பணம் கூட செலுத்தப்படவில்லை. 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலின் போது 30 மில்லியன் ரூபா மாத்திரமே அச்சக பணிகளுக்காக வழங்கப்பட்டது. ஆகவே வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு நிதி ஒரு தடையில்லை.

வாக்குச்சீட்டு அச்சிடும் விவகாரம் தொடர்பில் அரச அச்சகத் திணைக்கள தலைவர் கங்கானிலியனகே,வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளுக்கு நிதி ஒரு தடையில்லை நிதியமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கையே தடையாக உள்ளது எனக் குறிப்பிடுகிறார். மறுபுறம் நிதி இல்லாமல் வாக்குச்சீட்டுக்களை அச்சிடமுடியாது என்றும் கூறுகிறார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளில் ஈடுபட சகல ஊழியர்களும் தயாராக உள்ள நிலையில் வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை வேண்டுமென்றே தாமதப்படுத்த ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொரு கருத்தைக் கூறி வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு முட்டுக்கட்டையாக அச்சகத் தலைவர் செயற்படுகிறார் - என்றார். (ச-இ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 12 . 1938



மறைவு 15 . 03 . 2022

அமரர்

**இராசரத்தினம் முத்தம்மா**

(திதி – பங்குனிமாத வளர்பிறை திரயோதசி – 03.04.2023)

அன்னையே எம்மை விட்டு ஆண்டொன்று
ஆனதம்மா
அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
வளர்த்திட்ட தெய்வமே!
உதிரம் வற்ற உழைத்து ஊர் போற்ற
வைத்தாயம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் பசுமை நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கருங்காலி,
காரைநகர்.

(CS/239694).6


## மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி பயிலும் பொருண்மியம் நலிந்த 5 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டது. பிரான்ஸில் வசிக்கும் வித்தியாலய பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தால் மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வீதம் மாணவர் ஒருவருக்கு தலா 72 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. உயர்தரத்தில் கல்வி பயிலும் 2 ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாக இந்த ஊக்குவிப்பு தொகை மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

பாடசாலையின் அதிபர் சுதாமதி தயாபரன், உப அதிபர் கோடீஸ்வரன், பழைய மாணவர் சங்கச் செயலாளர் க.ரஜனிகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்கினர். (எ-14,159)

## தவறான முடிவெடுத்து யுவதியொருவர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாணம், நாவாந்துறைப் பகுதியில் வசித்துவரும் யுவதியொருவர் தவறான முடிவெடுத்து நேற்று உயிரிழந்தார்.

இந்த யுவதி யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள நகைக் கடையொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். இந்த நிலையில், பல்கலைக்கழகத்துக்கு மேற்படிப்புக்காக அவர் தகுதி பெற்றுள்ளார். இதனால், நேற்று முதல் தனது பணியில் இருந்து அவர் விலகியுள்ளார். பல்கலைக்கழக படிப்புக்கு அதிக நிதி தேவைப்படும் என்றும் குடும்ப வறுமையில் எவ்வாறு அதை எதிர்கொள்வது என்றும் அவர் தனது குடும்பத்தினருடன் ஆதங்கப்பட்டுள்ளார். இவ்வாறு உரையாடிய சில மணிநேரங்களின் பின்னர், தனது தாயார் கூலி வேலைக்குச் சென்றசமயம், அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26,23,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மாயவிம்பங்கள் தீர்வல்ல

இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த சில தினங்களாக சடுதியாக அதிகரித்து வருவதை, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பெரு மெடுப்பில் பரப்புரைப்படுத்துகின்றது. நாட்டின் பொருளாதாரம் இயல்புக்குத் திரும்புகின்றது என்ற மகிழ்ச்சிக் குரல்கள் ஆங்காங்கே கேட்கின்றன. ரூபாவின் பெறுமதி அதிகரிப்பது மகிழ்ச்சியான செய்தி என்கின்றபோதும், அது நாட்டின் பொருளாதாரம் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புவதைக் காட்டுகின்றதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிக்குள் சிக்கிய பின்னர் ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி வெகுவாக அதிகரித்திருந்தது. நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்புப் பற்றாக்குறையே அதற்குக் காரணம். டொலர் கையிருப்பு ஏறக்குறைய காலியான நிலையில், இறக்குமதிகளுக்குத் தடை விதித்த அரசாங்கம், வெளி நாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதையும் இடைநிறுத்தியது, அது சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் பெரும் பின்னடைவாக மாறியிருப்பதும், உள்நாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியிருப்பதும் தெரிந்ததுதான்.

இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டிலிருந்து டொலர் வெளியேறும் அனைத்து வழிகளையும் அடைத்து, அந்நியச் செலாவணிக் கையிருப்பை மெதுவாக அரசாங்கம் உயர்த்தியது. இயல்பான பொருளாதாரச் சுழற்சி அல்லாமல், செயற்கையான தடைகளை ஏற்படுத்தி ஒரு தற்காலிக இயல்புநிலைமை தோற்றுவிக்கப்பட்டது. ஆயினும் அரசாங்கத்தின் இந்த நகர்வுகளால் பொருளாதார நெருக்கடி ஒருபோதும் தீர்ந்து விடப்போவதில்லை. மாறாக எதிர்காலத்தில் அது மேலதிகமாகப் பல சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதே உண்மை.

தற்போது உலக வங்கி இலங்கைக்கு வழங்கியிருக்கும் 400 மில்லியன் டொலர் பெறுமதியிலான கடனே டொலரின் பெறுமதி சடுதியாகக் குறைவதற்குப் பிரதான காரணம் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள். சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளும் இந்த மாதம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பும் இதற்கு ஒரு காரணம். ஆனால், இந்த நிலைமை தொடருமா என்பதும், டொலரின் பெறுமதி குறைவால் மக்களுக்கு அனுகூலங்கள் கிடைக்குமா என்பதும் சந்தேகம்தான்.

உலக வங்கியால் வழங்கப்பட்டுள்ள கடன் உதவி குறுகிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படவேண்டியது. ஓராண்டு காலத்தில் அந்தக் கடன் இலங்கையால் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனே. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி கிடைத்ததும், இதுவரை இலங்கை இறுக அடைத்திருந்த இறக்குமதிகளைத் திறந்துவிட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகும். அதைப்போன்று ஏனைய நாடுகளிடமிருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்த ஆரம்பிக்கவும் வேண்டும். அதன்பின்னர் நாட்டிலிருந்து டொலர் வெளிச்செல்ல ஆரம்பிக்க மீண்டும் டொலரின் பெறுமதி உயரவே செய்யும். அதைச் சமாளிக்க இலங்கை மீண்டும் கடன்களைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும். இது ஓராண்டுக்குள்ளோ அல்லது ஓரிரு மாதங்களிலோ நடக்கும் என்பது பொருளாதார விற்பன்னர்களின் எதிர்வு கூறல். இது இப்போதைய நிலைமையை விடவும் மோசமான நிலைமையைக்கூட உருவாக்கலாம்.


சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைத்ததும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரும் என்கின்றது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம். ஏறக்குறைய 54 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்களைச் செலுத்தவேண்டிய நிலையில் உள்ள இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் கடனை வாங்கிக் கொண்டு என்ன செய்யமுடியும்? ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைத்ததும் மீண்டும் சர்வதேச நாடுகளிடம் இலங்கை கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்தக் கடன்களால் காலத்தை ஓட்டிவிடலாம் என்பதுதான் அரசாங்கத்தின் ஒரேயொரு நம்பிக்கை.

இயல்பான பொருளாதாரச்சுழற்சி மூலம் நடக்க வேண்டிய அனைத்தும் அரசாங்கத்தால் செயற்கையாக உருவாக்கப்பட்டு ஒரு மாய விம்பம் கட்டியெழுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ரூபாவின் பெறுமதி உயர்வதே நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்ற சாதாரண மக்களின் மனவோட்டத்தை வைத்து, மீண்டும் அரசியல் சித்து விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. நாட்டுக்கான சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு, ஊழல்வாதிகள் அதிகாரத்தில் இருந்து அகற்றப்படவேண்டும். நாட்டின் உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். இவை மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தில் நிலையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும். ஆனால், அவை எதற்கும் தயார் இல்லாத அரசாங்கம், மீண்டும் மீண்டும் கடன்களைப் பெற்று நிலைமையைத் தற்காலிகமாகச் சமாளித்துவிடவே முயல்கின்றது.

நாட்டில் மாற்றங்கள் ஏற்படும்வரையில் இந்த நெருக்கடி தீர்ந்து விடப்போவதில்லை. ஊழலற்றவர்கள் அதிகாரத்துக்குக் கொண்டு வரப்பட்டு, நாட்டுக்கான சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் உருவாக்கப்படுமாக இருந்தால் மட்டுமே இந்த நாடு தப்பிப்பிழைத்துக்கொள்ளும். இல்லாவிட்டால் இந்த நெருக்கடி தொடர்கதையாகவே இருக்கும். நாடு தப்பிப்பிழைப்பது நாட்டு மக்களின் முன்னோக்கிய சிந்தனையிலும், தீர்மானத்திலுமே உள்ளது. சரியான நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்கவேண்டிய [illegible] அதைச் சரிவரச் செய்வார்களேயானால் இந்துசமுத்திரத்தின் முத்து என்றும் ஜொலிக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

"தோல்வியே வெற்றிக்கான திறவுகோல், ஒவ்வொரு தவறும் நமக்கு ஏதோ ஒன்றைக் கற்றுக்கொடுக்கிறது" – மோரிஹெய் உஷிபா




# பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டு சுருங்கும்!

## மூடிஸ் நிறுவனம் எதிர்வுகூறல்

**கொழும்பு, மார்ச் 15**

**மோசமான நிதி நெருக்கடியை கடந்து வரும் நிலையில் இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3 சதவீதத்தால் சுருங்கலாம் என மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:

இலங்கையின் நிதி நெருக்கடியானது அதன் அந்நியச் செலாவணிக் கையிருப்பில் கடுமையான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் பொருளாதார வளர்ச்சி 2024 இல் மீண்டும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்படவுள்ள 2.9 பில்லியன் டொலர் கடன் இந்த மாத இறுதியில் அங்கீகரிக்கப்படலாம். இது ஒரு சாதகமான வரவு. இது ஏனைய வெளிப்புற நிதியுதவிகளைத் திறக்கிறது.

அதன்மூலம் பொருளாதார மீட்சியைத் தக்கவைக்க மற்றும் சமூக சவால்களைத் தணிக்கத் தேவையான உணவு, எரிபொருள் மற்றும் மூலப்பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கிறது.

எனினும் இலங்கையில் இன்னும் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவேண்டும். இதனால் ளுகடனாளிகளுக்கு இழுபறி ஏற்படலாம். ஆயினும் நீடித்த பேச்சுகள் வெளிப்புற நிதியுதவிக்கான அணுகலை ஆபத்தில் ஆழ்த்தலாம். அத்துடன் தனியார் கடனாளிகளுக்கு அதிக இழப்புகள் ஏற்படக் கூடும் - என்றுள்ளது. (ச-இ)

# அத்தியாவசிய சேவையாக தபால் சேவை பிரகடனம்!

கொழும்பு, மார்ச் 15

தபால் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கமைய ஜனாதிபதியின் செயலாளரால் இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்பதாக துறைமுகங்கள், விமான சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகள் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை**

**16.03.2023**
**வியாழக்கிழமை**
**பங்குனி 02**

சுபநேரம் : 07.50 - 09.20
ராகுகாலம் : 01.50 - 03.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப் படகுகளால் முல்லை. மீனவர்கள் பாதிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு கடற்பரப்பில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப்படகுகளால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

2010ஆம் ஆண்டின் பின்னர் எல்லை தாண்டி வரும் இந்திய இழுவைப் படகுகளால் முல்லைத்தீவு மீனவர்களுக்கு கடல் உணவுகள் பிடிபடுவது மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் கடலுக்குச் சென்றாலும் மீன்கள் குறைவாகப் பிடிபடுவதனால் முல்லைத்தீவு மீனவர்கள் வாழ்வாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து மிகக் குறுகிய தூரத்தில் இந்திய இழுவைப்படகுகள் தொழிலில் ஈடுபடுகின்றன.

இது தொடர்பாக கடற்படையினர் முழுமையான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. இந்திய இழுவைப் படகுகளின் வருகைக்கு எதிராக கடந்த காலங்களில் முல்லைத்தீவு மீனவர்களால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு ஜனாதிபதி, அமைச்சர்களுக்கு மனுக்கள் கையளிக்கப்பட்டும் இழுவைப் படகுகளின் வருகை கட்டுப்படுத்தப்படவில்லை. காற்று வீசும் காலங்களில் முல்லைத்தீவு மீனவர்கள் கடலுக்குச் செல்லாத நிலையைப் பயன்படுத்தி, இந்திய இழுவைப்படகுகள் கரைக்கு அண்மையில் கூட தொழிலில் ஈடுபடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதுதொடர்பாக அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முல்லைத்தீவு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14-13)



# பலாலியில் மாடுகள் திருட்டு சந்தேகநபர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 15

பலாலி மருதடிப் பகுதியில் மாடுகள் திருடிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பலாலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதடிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு வேளை 5 மாடுகள் பட்டா வாகனத்தில் திருடிச் செல்லப்பட்டன. அன்றையதினம் மாடுகளுடன் 3 சந்தேகநபர்கள் பலாலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட 5 மாடுகளில் ஒரு மாடு உயிரிழந்து காணப்பட்டது. சந்தேகநபர்கள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமைவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அதன்பின்னர் வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மாட்டை காசு கொடுத்துப் பெற்றதாக ஒருவர் சத்தியக் கடதாசி மூலம் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இந்த நிலையில் சந்தேகநபர்கள் மூன்று பேரையும் தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார். மாட்டைக் காசு கொடுத்து பெற்றுக்கொண்டவர் வழக்கு நிறைவடையும்வரை மாட்டை பராமரிக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு எதிர்வரும் மே மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. மேலும் வழக்கு நிறைவு பெறும் வரை மாட்டை பராமரிப்பதாக பெற்றுக்கொண்டவர் சத்தியக்கடதாசி மூலம் சட்டத்தரணி ஊடாக அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து பணம் கொடுத்து மாட்டைப் பெற்றுக்கொண்டவரிடம் மாடுகள் மீளவும் வழங்கப்பட்டன. (எ-14-23)

# விபத்தில் இரு மாத சிசு காயம்

சாவகச்சேரி, மார்ச் 15

ஓட்டோ விபத்தில் ஓட்டோவில் பயணித்த தாயின் மடியிலிருந்த இரண்டு மாதமேயான பெண் சிசு தவறி விழுந்துள்ளது.

இந்தச்சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை கோவிலாக்கண்டியில் இடம்பெற்றது.

மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற குழந்தைகள் கிளினிக்கில் தடுப்பூசி ஏற்றுவதற்காக தாய், சிசுவை ஓட்டோவில் கூட்டிச் சென்றுள்ளார்.

ஓட்டோவின் முன்சில்லு காற்றுப் போனதால் எதிரே காணப்பட்ட மதகுடன் ஓட்டோ மோதியது. அப்போது ஓட்டோவுக்குள் தாயின் மடியிலிருந்த சிசு ஓட்டோவுக்குள் தவறிவிழுந்தது.

அதையடுத்து சிசு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. (எ-14-9)

# மைதானத்திலிருந்து வெளியேறிய இராணுவம்

கிளிநொச்சி, மார்ச் 15

வன்னேரிக்குளம் வன்னொளி விளையாட்டு மைதானத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். 2009ஆம் ஆண்டில் இருந்து வன்னொளி விளையாட்டுக் கழக மைதானத்தின் ஒரு பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். இதன்காரணமாக விளையாட்டுக் கழகத்தால் முழுமையாக மைதானத்தைப் பயன்படுத்துவதிலும் பொது நிகழ்வுகளை நடத்துவதிலும் நெருக்கடிகள் காணப்பட்டன.

கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் மைதானத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளுக்கு வழி வகுக்கவேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மைதானத்தில் இருந்து இராணுவத்தினர் முழுமையாக வெளியேறியுள்ளனர். (எ-14-13)

# பேருந்துகள் ஏற்றாது செல்வதால் வீதியில் அந்தரிக்கும் மாணவர்கள்

## மாங்குளத்தில் தொடரும் அவலம்

முல்லைத்தீவு, மார்ச் 15

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம், கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களை ஏ-9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் ஏற்றாது சென்றதால் மாணவர்கள் பரீட்சைக்குச் செல்ல முடியாதநிலை தோன்றியது. அதன்பின்னர் மாங்குளம் பொலிஸாரின் தலையீட்டையடுத்து பேருந்தில் மாணவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சை நடைபெற்ற நாளான நேற்றுமுன்தினம் பனிக்கன்குளம், கிழவன்குளம் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மாங்குளம் மகா வித்தியாலயத்துக்குச் செல்வதற்கு ஏ-9 வீதியிலுள்ள பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்தனர். காலை 8.12 மணி வரையிலும் எந்தப் பேருந்துகளும் மாணவர்களை ஏற்றிச்செல்லவில்லை. இது தொடர்பில் மாங்குளம் போக்குவரத்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், தரிப்பிடத்துக்கு விரைந்த மாங்குளம் பொலிஸார் அரச பேருந்து வருவதை அவதானித்து பேருந்தை மறித்துள்ளனர். அங்கு பொலிஸாருக்கும் பேருந்து நடத்துநருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட பின்னரே மாணவர்களை பேருந்து ஏற்றிச்சென்றது.

மாணவர்கள் தொடர்ச்சியாக பல சிரமங்களுக்கு மத்தியிலே பாடசாலை சென்று வருகின்றனர். இ.போ.ச அதிகாரிகளால் மாணவர்களை பருவகால சிட்டை பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. மாணவர்கள் பருவகால சிட்டையைப் பெற்றும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. மாறாக பருவகால சிட்டை பெற்றபின்னர் பேருந்துகள் தம்மை ஏற்றாமல் செல்வதே அதிகரித்துள்ளது என்று மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அதிகாரிகள் பலருக்கும் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பேருந்துகள் ஏற்றாமல் செல்வதால் அண்மையில் வீதியை மறித்து போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. அதனையடுத்து மாங்குளம் பொலிஸாரால் மாணவர்களின் விடயம் நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு, வடமாகாண போக்குவரத்துப் பிரிவினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் ஏ-9 வீதியை மூடி போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (எ-14-19)

# உதவித்திட்டங்களை முடித்த பயனாளிகளுக்கு சான்றிதழ்

கிளிநொச்சி, மார்ச் 15

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் நோர்வே பாடசாலையின் நிதிப்பங்களிப்பில் வழங்கப்பட்ட உதவித்திட்டங்களை அமைத்துக்காட்டிய பயனாளிகளுக்கு பளை இந்திராபுரத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சான்றிதழ் வழங்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் இத்தாவில், முகமாலை மற்றும் இந்திராபுரம் கிராமங்களில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு நோர்வே பாடசாலையினர் போரூட் நிறுவனத்தின் ஊடாக கடந்தவருடம் நிதியுதவி வழங்கினர்.

உதவித் திட்டத்துக்கு நிதி வழங்கிய நோர்வே பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்கள் உதவித் திட்டங்களை நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

திட்டத்தில் 20 தற்காலிக குடியிருப்புகள், 20 மலசலகூடங்கள், 7 கிணறுகள் ஆகியவற்றை அமைத்துள்ளனர். அவற்றைப் பார்வையிட்ட பின்னரே பயனாளிகளுடனான கலந்துரையாடலை நடத்தி பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினர். (எ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள உள்ள
தூஉம் இன்றிக் கெடும்." -வள்ளுவர்



# கண்ணி வெடிகளுடன் களமாடி மக்கள் வாழ வழிசமைத்தவர்கள்

மு.தமிழ்ச்செல்வன்

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல மிக மோசமான யுத்தம் 2009 இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இற்றைக்கு 13 வருடங்கள் கடந்த நிலையிலும் யுத்தத்தின் எச்சங்களும், அதன் பாதிப்புக்களும் இன்னும் முழுமையாக நீங்கியதாக இல்லை. இதில் முக்கியமானது யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளும், வெடிக்காத வெடிபொருள்களும்தான்.

இதன் தாக்கம் காரணமாக இன்று தங்களது சொந்த நிலங்களில் குடியமர முடியாதும், விவசாயம் செய்ய முடியாதும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உள்ளனர். இதிலிருந்து மக்களை முழுமையாக மீட்கும் மிக முக்கியமான மனிதாபிமானப் பணியினை ஜப்பான் அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் டாஸ் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. ஒரு அரச சார்பற்ற கண்ணிவெடியகற்றும், மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனமாக டாஸ் தனது பணிகளை வடக்கில் மேற்கொள்கிறது.

2010ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றி வடமாகாணத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளான மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்துக்கு பெரிதும் உதவி வருகிறது. தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி இதுவரை சுமார் 15.5 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகம், நெல்வயல் நிலங்கள், ஆற்றங்கரைகள், பள்ளிக்கூட வளாகம், கோயில், ஆனையிறவு உப்புவயல்கள், பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலங்கள், போன்றன பாதுகாப்பான கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.



மற்றும் கிளிநொச்சியில் முகமாலை, முல்லைத்தீவில் மணலாறு மற்றும் கொக்குத்தொடுவாய் பிரதேசங்களில் இதுவரை 357 இடங்களில் முழுமையாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 13 இடங்களில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அத்தோடு 26 இடங்களில் வெடிக்காத வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் நாடுகளின் நிதியுதவியுடன் தன்னுடைய கண்ணிவெடியகற்றும் வேலையை ஆரம்பத்தில் தொடங்கிய டாஸ், தற்பொழுது ஜப்பான் அரசாங்கம், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்தின் கண்ணிவெடியகற்றும் உலகத்துக்கான அறக்கட்டளை என்பனவற்றின் நிதியுதவியுடன் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

டாஸ் நிறுவனம் ஏறத்தாள 433 பேருடன் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட 13 கண்ணிவெடியகற்றும் குழுக்களாகவும், 4 தரஉத்தரவாத மற்றும் ஆய்வுக்குழுக்களாகவும் அத்தோடு ஒரு வெடிபொருள் சம்பந்தமான விழிப்புணர்வு குழுவுடனும் மற்றும் ஒரு பணியாளர் மேம்படுத்தல் பயிற்சிக் குழுவுடனும் இயங்குகிறது.



இதன் பிரதான செயற்பாடுகளுடன் மேலும் வெடிபொருள்களால் ஏற்படும் பாதிப்புகள் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அவர்களை பாதுகாப்புடன் இருக்கவும் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரதான பணியினை மேற்கொள்வதோடு, இந்தப் பணியில் ஈடுபடுகின்றவர்களின் வாழ்வாதாரத்துக்கான தொழிலாக இந்தப் வேலைவாய்ப்பும் காணப்படுகிறது. இந்தப் பணியாளர்களில் 22 வீதமானவர்கள் பெண்களாவர்.

குறிப்பாக மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்பவற்றுக்கு கண்ணிவெடி அகற்றும் பணி என்பது அவர்களது வாழ்வாதாரத்துக்கான தொழிலாகவும் அமைகிறது.

இதுவரை கண்ணிவெடி அகற்றப்பட்ட மொத்த நிலப்பரப்பால் நேரடியாகப் பயனடைந்தவர்களாக 24 ஆயிரத்து 301 பேரும் மறைமுகப் பயனாளிகளாக 71 ஆயிரத்து 083 பேரும் அடங்குவார்கள்.

இந்தக் கண்ணிவெடியகற்றலில் மொத்தமாக மீட்கப்பட்ட வெடிபொருள்களாக 53 ஆயிரத்து 325 தனிநபர் கண்ணிவெடிகள், 102 கனரக வாகன கண்ணிவெடிகள், 13 ஆயிரத்து 591 வெடிக்காத பொருள்கள் மற்றும் 55 ஆயிரத்து 684 சிறிய ஆயத வெடிபொருள்கள் என்பன கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பாக அழிக்கப்பட்டுள்ளன. இதுவொரு வரலாற்று பணியாகவும் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவம் சொல்லும்

‘கலாவிபூஷணம்’
இரா. நிஷாந்தன்

## மருத்துவம்

எங்கள் வாழ்வில் நாம் நோய் இல்லாது வாழ்வது பெரும் பாக்கியம். இதனையே ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ எனும் முதுமொழி எடுத்துரைக்கிறது. நம் உடலை நோய் நெருங்காத வண்ணம் நாம் பாதுகாப்பது அவசியமாகும். இன்று உடலில் நோய் இல்லாதோர் மிகக் குறைவே என்று சொல்லும்படிக்கு நோயினால் பாதிப்புற்றோர் அதிகம் எனலாம். உடலில் நோய் ஏற்படுவதற்கு தவறான உணவுப் பழக்கவழக்கமே முக்கியமான பங்காற்றுகின்றது. எனவே உணவை மருந்தெனக் கருதி உரியவாறு உட்கொண்டால் எம் உடலை நோய் நெருங்கிடமாட்டாது. உடலை நோய் வராது பாதுகாக்கும் மருந்து உணவே என்பதை திருவள்ளுவர் மருந்து எனும் அதிகாரத்தில் அழகுற எடுத்துரைத்துள்ளார்.

**எப்போது உண்ண வேண்டும்**

பொதுவாக நாம் காலை, மதியம், இரவு என மூன்று வேளை உணவு உண்கின்றோம். அதற்கு இடைப்பட்ட நேரத்திலும் பலவற்றை உண்கின்றோம். ஆனால் உணவு உண்ணும் கால இடைவெளி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வள்ளுவர் இப்படிக் கூறுகின்றார்.

**‘மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்’**

இதன் கருத்து, ஒருவன் முன்பு உண்ட உணவு நன்றாக செரிமானமடைந்த பின்னர் அடுத்த உணவை உண்பான் எனின் அவன் உடம்புக்கு வேறு மருந்து தேவையில்லை என்பதாம். எனவே உண்ட உணவு செரித்து விட்டது எனில் அடுத்து பசி எடுக்கும் போது உண்ண வேண்டிய அளவு அறிந்து உணவை உண்பதால் ஒருவனது உடல் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கு வழிவகுக்கும் என்பதையும் வள்ளுவர் குறள் வழி காண்பித்துள்ளார்.

உடலில் பசி ஏற்படும் போது கையில் கிடைக்கும் எவ் உணவையும் நாம் உண்டுவிடக்கூடாது. உணவை அளவோடு உண்பது மிகவும் அவசியமாகும். சுவையாக இருக்கிறது என்று அளவுக்கு அதிகமாக உண்டால் அதனால் நோய் தானாக உடலை வந்து சேரும். புசியின் அளவு அறிந்து அளவோடு உண்பதே நோய் இன்றி வாழும் வழியாகும் என்பதை,


**‘தீ அளவு அன்றிப் தெரியான் பெரிது உண்ணின்**
**நோய் அளவு இன்றிப் படும்’**

எனும் குறள் வழி கூறுகின்றார்.

எனவே அளவோடு உண்போர் நோயின்றி வாழ்வதும், அதிகம் உண்பவர் உடலில் நோய் நிலைகொள்வதும் இயற்கையாம்; என்று அறிவோம். மருத்துவ நூலோர் கூறும் வாதம், பித்தம், சிலேத்துமம் எனும் மூன்றின் இயல்புக் கேற்ப உண்ணும் உணவானது அதிகமாயினும், குறைவாயினும் நோய் உண்டாகும் என்கின்றார் வள்ளுவர். எனவே உணவின் அளவு குறையாமலும், மிகாமலும் அமைய வேண்டும். நோய் ஏற்பட்டுள்ள ஒரு நோயாளிக்கு மருத்துவர் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் வள்ளுவர் அழகுற காப்பியம் செய்துள்ளார். குறளைப் படியுங்கள்.

**நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்**

நோயாளியின் உடலை பரிசோதித்து நோய் இது தான் என்பதைக் கண்டறிந்து, அந்த நோய்க்கான மூல காரணத்தையும் அறிந்து, அந்த நோய் தீர்க்கும் வழியினை அறிந்து, அதனை பிழைக்காமல் நிறைவேற்ற வேண்டியது மருத்துவனின் கடமையாம் என்று கொள்ளவேண்டும். இன்று சிறுவர் முதல் பெரியோர் வரையும் பல தொற்றா நோய்களால் பாதிப்புறுகின்றனர். இதற்கு அடிப்படைக்காரணமே நாம் கைக்கொள்ளும் தவறான உணவுப்பழக்கவழக்கமே எனலாம். எனவே வள்ளுவர் கூறியது போல பசி அறிந்து உணவை மருந்தாக நினைத்து உண்பதற்கு நாமும் முயலவேண்டும். அவ்வாறு செய்யின் நோய் இன்றி வாழ்வில் நலம்பெற்று வாழ முடியும்.



### புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைக்களை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**
புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
puthanpoigai@gmail.com

### கைத்தொலைபேசி

கையில் கைத்தொலைபேசியுடன் காசினியே- எங்கள்
கையில் எனத் திரியும் இத் தலைமுறை
கடிவாளம் இலாக் குதிரைபோல் தவறான பாதைதனில்
தான்தோன்றியாய் தறி கெட்டுப் போகிறது.





சி. மகாலட்சுமி
கொக்குவில்

### கௌரவம்

கதவு தட்டிய சத்தம் கேட்டு கதவைத் திறந்தவள்
கசங்கிய உடையுடன் நின்ற உறவுதனை ஏன் வந்தாய்
அலட்சியமாய் ஏன் வந்தாய் எனக் கேட்டுத் திரும்பியவள்
கச்சிதமாய் காரில் வந்தோரை வாங்கோ என
வாய் குளிர வரவேற்றாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவிலில்

# கவிஞர்.கலைச்செல்வி புலியூர்க்கேசிகனின் நூல் அறிமுகமும் எட்டுத் தமிழறிஞர்களுக்கு தமிழேந்தல் விருது வழங்கலும்

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் தமிழ்நாடு கவிஞர். கலைச்செல்வி புலியூர்க்கேசிகனின் "நற்திணைத் தலைவனின் நெஞ்சொடு கிளத்தல்" எனும் நூல் அறிமுகவிழா கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.இணுவில் பொதுநூலக தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையத்தின் தலைவர் சி.புரந்தரா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இணுவில் பொதுநூலகப் போசகரும், கல்வியியலாளருமான இரா.அருட்செல்வம் தொடக்க உரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நூலின் அறிமுக உரையையும் நிகழ்த்தினர். நூலினை நூலாசிரியர் கவிஞர்.கலைச்செல்வி புலியூர்க்கேசிகன் வெளியிட்டு வைக்க இணுவில் அண்ணா தொழிலக அதிபர் நடராஜா திவாகர் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் எட்டுத் தமிழறிஞர்கள் உரையாசிரியர் புலியூர்க்கேசிகன் நூற்றாண்டு விழா தமிழேந்தல் விருது வழங்கிச் சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டனர்.



அந்தவகையில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், சைவத் தமிழறிஞருமான செஞ்சொற்செல்வர். கலாநிதி.ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர்.மனோன்மணி சண்முகதாஸ் இணையர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி. சி.சிவலிங்கராஜா, பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர்.கி.விசாகரூபன், கிழக்குப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை கலை, கலாசார பீடத் தலைவர் பேராசிரியர் திருமதி.எஸ்.கேசவன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் தமிழேந்தல் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் உரையாசிரியர் புலியூர்க்கேசிகன் நூற்றாண்டு விழா நினைவு விருதும் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் உரையாசிரியர் புலியூர்க்கேசிகன் நூற்றாண்டு விழா நினைவு விருது இணுவில் பொதுநூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பொதுநூலகம், குரும்பசிட்டி ஆ.சி.நடராஜா பொதுநூலகம் ஆகியவற்றிற்கு வழங்கிவைக்கப்பட்டது. (66)

# சுயதொழில் பயிற்சிக்கான கண்காட்சி





வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேசசெயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சியும் விற்பனையும் இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது.

பிரதேசசெயலர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 2022ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கான அழகுக்கலை டிப்ளோமா கற்கை நெறியினை பயின்ற மாணவிகளின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சேலை வகைகள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான நாளாந்த ஆடை வகைகள், பாடசாலைச் சீருடைகள், சுடிதார் வகைகள், மேசை விரிப்புகள், தளவிரிப்புகள், சுவர் அலங்கார விரிப்புகள், வேலைப்பாடுகளுடன் கூடிய கட்டில் மெத்தை விரிப்புகள், சோபா விரிப்புகள், குழந்தைகளுக்கான தொட்டில் விரிப்புக்கள் என்பனவும் காப்பு, காதணிகள் முதலான கைகளால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்களும் காண்போரை கவர்ந்தன.

இதனை விடவும் கேக் ஐசிங் வகைகளில் பிறந்தநாள் கேக் முதல் திருமணத்துக்கான பொன்டன் கேக் போன்ற பலவிதமான கேக் வகைகள் கண்காட்சியின் தரத்தை உயர்த்தியது. அத்துடன் பூ அலங்கார வேலைப்பாடுகள், பெறுமதியான திருமண பூச்செண்டுகள், நட்சத்திர விடுதிகளுக்குரிய உணவு அலங்காரங்கள் என்பனவும் பார்ப்பவர்களால் மெச்சப்பட்டன.

தற்காலத்துக்குரிய மணப்பெண் அலங்காரங்கள், இந்து முறையான அலங்காரம், வரவேற்பு உபசாரத்துக்கான மணப்பெண் அலங்காரம், சாதாரண நிகழ்வுகளுக்கான அலங்காரம் என்பனவும் நேரில் செய்து காண்பிக்கப்பட்டன. டிப்ளோமா கல்வியைத் தொடர்ந்து உயர்கல்வி அழகுக்கலை துறையில் பயில விரும்பும் மாணவிகள் இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரியில் அதனைத் தொடர்வதற்கான விளக்கங்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி. அபிராமி சிவஞானம் அவர்களால் சிறப்புரையாக வழங்கப்பட்டது.

மாணவிகளை பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி. அ.சங்கீதா மலர் மாலை அணிவித்து பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து மாணவிகளின் கலை நிகழ்வுகளும் கண்காட்சியை மேலும் சிறப்பாக்கின.

கண்காட்சிக்கான அனுசரணையை வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து இணுவிலூர் தொழில் அதிபர் லயன். துரை. பிரணவன் வழங்கியதோடு மட்டுமல்லாமல் நிகழ்வில் விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

தையல்போதனாசிரியரின் நன்றியுரையுடன் கண்காட்சி தொடக்க நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக்களில் ஏற்படும் உபாதைகளும் முதலுதவியும்



த.சஜீவன்
இயன் மருத்துவர்
யாழ்.போதனா மருத்துவமனை

**பாடசாலைகளில் மெய்வன்மைப் போட்டிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. இந்த நிலையில், இந்த மெய்வன்மைப் போட்டிகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஏற்படும் காயங்கள், உபாதைகள் போன்றவற்றை சரியான முறையில் இனங்கண்டு பராமரிப்பதற்கான ஆரம்ப அறிவை வழங்குவதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும்.**

## உபாதைகள் எவ்வாறு ஏற்படலாம்?

எந்தவொரு விளையாட்டிலும் உபாதைகள், காயங்கள் ஏற்படக்கூடும். இவை திடீரென குறுகிய காலப்பகுதியில் ஏற்படும் உபாதைகள், நீண்ட காலப்பகுதியில் ஏற்படும் உபாதைகள் என வகைப்படுத்தப்படலாம். விளையாட்டுக்கான ஆரம்ப உஷ்ணப்படுத்தல் பயிற்சிகளைத் தவறவிடுதல் அல்லது சரியாக மேற்கொள்ளாமை, பயிற்சியின் போது உடல் தசைகளின் அளவுக்கு மீறிய பயன்பாடு, வினைத்திறனற்ற பயிற்சி முறைகள், உடற்பாகங்களால் தாங்கக்கூடிய அளவைவிட கூடியளவு விசையின் நேரடித் தாக்கம், போதியளவு பயிற்சியின்றி நேரடியாக விளையாட்டில் ஈடுபடுதல், சரியான உபகரணங்களின் பயன்பாட்டின்மையும் சரியான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளைப் பேணாமையும் என்று பல்வேறு காரணிகளால் உபாதைகள் ஏற்படுகின்றன.

## காயங்களுக்கான முதலுதவிகள் என்ன?

விளையாட்டு நிகழ்வுகளில் ஏற்படும் உபாதைகளுக்கு வழங்கப்படும் முதலுதவிகளின் நோக்கம், சம்பந்தப்பட்ட பகுதியானது மேலும் பாதிப்படைவதை (உபாதை தீவிரமாகுவதை) தடுப்பதாகும். இவை பின்வரும் முறையில் மேற்கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட உடல் பகுதியைத் தாங்கிப்பிடித்தல் (உதாரணமாக ஒருவர் ஓடும்போது குதிக்காலில் பிறழ்வு ஏற்படின் பாதிக்கப்பட்ட காலை ஊன்றாது இன்னொருவரின் உதவியுடன் வெளியே வருதல்), பாதிக்கப்பட்ட உடல் பகுதி மேலும் பாதிப்படையாது பாதுகாத்தல் (இது சம்பந்தப்பட்ட விளையாட்டை உடன் நிறுத்தி மேலும் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதைக் குறிக்கும்), ஐஸ் கட்டிகளைப் பயன்படுத்துதல் (இது பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள குருதிக் குழாய்களின் விட்டத்தில் சுருக்கத்தை ஏற்படுத்தும். இதனால் குருதிப்போக்கு, மேலதிக வீக்கம், மேலதிக பாதிப்பு என்பன குறைக்கப்படும்) பன்டேஜினால் அழுத்தமாகக் கட்டுதல் (இது பாதிக்கப்பட்ட நாளிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் நோக்கம் வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகும். இதன்போது சம்பந்தப்பட்ட பகுதிக்கும் அதன் கீழுள்ள பகுதிகளுக்கும் குருதி ஓட்டத்தைக் கட்டுப்படுத்தாதவாறு கட்டுப்போடுதல் அவசியமாகும்), பாதிக்கப்பட்ட பகுதியை உயர்த்தி வைத்திருத்தல் (இது பாதிக்கப்பட்ட பகுதியை இதயம் காணப்படும் மட்டத்தை விட இயன்றளவு உயர்த்தி வைத்திருப்பதைக் குறிக்கும். இதன் நோக்கம் வீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகும்) என்றவாறாக இந்த முதலுதவிகள் அமைகின்றன. இவற்றில் ஐஸ்க்ளைப் பயன்படுத்தி முதலுதவியை வழங்கும்போது, ஐஸ் கட்டியானது உடல் பாகத்தில் நேரடியாகத் தொடுகையுறச் செய்யக்கூடாது. அவை ஒரு துணியால் சுற்றித் தொடுகையுறச் செய்யப்பட வேண்டும். இதை கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## மருத்துவ உதவி

மேற்குறிப்பிட்ட மருத்துவ உதவிகளை மேற்கொண்டு 48 மணித்தியாலங்களின் பின்னரும் வீக்கம், வலி என்பன காணப்படும் பட்சத்தில் மருத்துவ உதவியை நாடவேண்டும். முதலுதவியின் பின் மருத்துவ உதவி நாடப்படும்போது தாங்க முடியாத வலிநிலை காணப்படும்போது வலியைக் குறைப்பதற்காக வலி நிவாரணிகள் வழங்கப்படும். இதைவிட உடலின் பாதிக்கப்பட்ட பகுதியை அசைவற்ற நிலையில் பேணவேண்டும். இது பிரதானமாக என்புகள், மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்புக்களின் போது மேற்கொள்ளப்படும். உதாரணமாக குதிக்கால் மூட்டில் ஏற்படும் தசை நாண் அறுகையின்போது மூட்டானது பொப் மூலம் அசைவற்ற நிலையில் வைக்கப்படலாம்.

## இயன்மருத்துவம்

பாதிப்புக்களால் உடற்பகுதிகள், மூட்டுக்களில் ஏற்படும் பாதிப்பை மீள் நிவர்த்தி செய்வதுடன், எந்தத் தசைப்பகுதிகளின் ஒருங்கிசைந்த தன்மை பாதிக்கப்பட்டதால் குறித்த உபாதை ஏற்படாது எனக் கண்டறிந்து தசைகளை வலுவூட்டுதலில் இயன் மருத்துவம் முக்கியமான பங்கு வகிக்கிறது. இதன்போது அசைவற்ற காலப்பகுதியில் இறுக்கமடைந்த மூட்டுக்களை அசைவுக்கு உட்படுத்துதல், அவற்றை அசையச் செய்தல், வலுவற்ற மூட்டுக்களை ஆதாரப்படுத்தல், உடற்பயிற்சிக் குறிப்புக்களை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படும்.

காயமடைந்த விளையாட்டு வீரர் பழையபடி மீண்டும் விளையாட்டுக்களில் ஈடுபடுவதில் இயன்மருத்துவர் பிரதான பங்கை வகிக்கிறார். இதன்போது அவர்களுக்கு மூட்டுக்களின் அசைவுக்கான பயிற்சிகள், தசைகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சிகள், தசைகளின் நீளங்களைப் பேணுவதற்கான பயிற்சிகள், மூட்டுக்களின் நிலைகளுக்கான பயிற்சிகள் என்பன அளிக்கப்படும். முடிவில் மீண்டும் ஏற்கனவே ஏற்பட்ட உபாதை ஏற்படாதிருக்க விளையாட்டு வீரர் பலப்படுத்தல் மற்றும் ஆக்க் நிலையுறுத்தல் எனும் விசேட பயிற்சிகளுக்கு உட்படுத்தப்படுவார்.

வீக்க நிலைமையின் ஆபத்துத் தன்மையைக் கருத்திற்கொண்டு மருத்துவரால் தேவை ஏற்படின் ஊசி மருந்துகள் பரிந்துரைக்கப்படும். சில வேளைகளில் காயத்தின் தன்மையின் அடிப்படையில் அறுவைச் சிகிச்சைகள் பரிந்துரைக்கப்படலாம். உதாரணமாக முழங்காலில் சில தசைநாண்களில் ஏற்படும் கிழிவானது அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்யப்படும்.

## காயம் அல்லது உபாதையின் போது சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுக்கலாமா?

காயம் அல்லது உபாதை ஏற்பட்டு 48 மணித்தியாலங்களுக்கு சுடுநீர் ஒத்தடம் கொடுக்கக்கூடாது. சுடுநீர் ஒத்தடமானது குருதிக் குழாய்களின் விட்டத்தை விரிவடையச் செய்து, குருதிப்பெருக்கு, வீக்கம் என்பன அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

## முதலுதவியின் போது தவிர்க்க வேண்டியவை?

காயங்களின்போது மதுப்பாவனை வலியைக் குறைப்பதுடன் குணமாதலைக் கூட்டும் என்பது முற்றிலும் தவறான சிந்தனையாகும். அவை மேலும் நோய் நிலைமையத் தீவிரமடையச் செய்யும். காயம் ஏற்பட்டவுடன் மேலும் பயிற்சி செய்தல் மேலும் ஓடுதல் என்பன நிறுத்தப்படவேண்டும். தசைகளை உடனடியாக உருவுதல் வீக்க நிலையை மேலும் கூட்டலாம்.

## உபாதைகள் வருவதை தவிர்ப்பது எவ்வாறு?

சரியாகத் திட்டமிடப்பட்ட உஷ்ணப்படுத்தல் பயிற்சிகளை விளையாட்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளல், பொருத்தமான பாதணிகளை அணிதல், சமநிலை பாதிப்படைந்த மூட்டுக்களை ஆதாரப்படுத்தல், பொருத்தமான பாதுகாப்புச் சாதனங்களைப் பயன்படுத்தல், தேவையான அளவு நீராகாரம் உள்ளெடுக்கப்படுவதை உறுதிப்படுத்தல், அதிக உஷ்ணமான காலப்பகுதியில் பயிற்சிகளைக் குறைத்தல், உடல் உறுதித் தன்மையை விளையாட்டுப் பருவகாலம் அல்லாத நிலையிலும் பேணுதல், பொருத்தமான தசைகளுக்கு பலப்படுத்தல் பயிற்சிகளை மேற்கொள்ளல், பொருத்தமான பயிற்சிகளை மேற்கொள்ளல், சரியான விளையாட்டு நுணுக்கங்களைப் பின்பற்றுதல், உடற்தகுதிக்கு மீறிய விளையாட்டுக்களை ஒரே தடவையில் செய்யாதிருத்தல் மூலம் உபாதைகள் வருவதைத் தடுக்கலாம்.

---

# ரயில் பயணங்கள்



தட தடக்கும் ரயிலிலே
படபடக்கும் மனமொன்று
சடுகுடு ஆட்டம் போடுது
சந்தடி சாக்கில தத்துவம் பேசுது!

ரயிலும் வாழ்வும் ஒன்றே
ஏறும் போது பயணசீட்டை வாங்கி
இறங்கும் போது பயணம் முடியும்
பிறக்கும் போது ஒருநாள்
இறப்புண்டு
அறிந்தே வாழ்வில்
பயணிக்கிறோம் !!

ஆண்டியும் அந்தணரும் ஒரே
இருக்கையிலே
ஆத்திகமும் நாத்திகமும்
அதே வண்டியிலே
ஒருவருக்கொருவர்
உதவிக்கொள்கிறார்
பயணிக்கையிலே
அவரவர் நிறுத்தம் வரும்போது
புன்முறுவலுடனே விடைபெறுவார்
ஆயினும் வாழ்க்கையில் மட்டும் முரண்பாடு !!

கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஒப்பந்தகாரர் தேவை

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

மேற்படி தேவஸ்தானத்திற்கு வர்ணப்பூச்சு மற்றும் உள்வீதி றெரசோ போடுதல், மூலஸ்தானம் கட்டுமானம் போன்ற வேலைகள் செய்வதற்கு ஒப்பந்தகாரர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய இல:-

**077 674 5885**

**நேரம் :** முற்பகல் 9.00 - 11.00, பி.ப. 4.00 - 5.00 மணிவரை நேரில் பார்வையிட முடியும்.

**காலம் :** 5 நாட்கள்

**செயலாளர்.**

(CS 23980)1-6

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 15

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா, இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜெ.கோகுலவாசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன் கலந்துகொள்ளவுள்ளார். (ம14)

## அமுதசுரபியின் ஈரவிழிசுமந்த துயர் பகிர்வு



தோற்றம் 21 • 08 • 1955

மறைவு 11 • 03 • 2023

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகால நிறுவுநர் காலஞ்சென்ற **வே.க.கந்தையா ஜே.பி** அவர்களின் அன்பு மருமகனும் மேற்படி சபையின் நிர்வாக அங்கத்தவருமான

### கனகரெத்தினம் புவனேஸ்வரன்

அவர்களின் மறைவு குறித்து எமது சபையின் ஈரவிழி சுமந்த துயரத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்கின்றோம். அன்னாரின் இழப்பு எமது சபைக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக அன்னை நாகபூஷணி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

(CS/23973)4.6

துயர்வில்
நிர்வாகம் -
ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி
அன்னதான சபை.

நயினாதீவு .2,
தொ.பே:- 021 321 3575

## கிருஷ்ணா அடைவு கடை

**பதிவு இல J / DS / BR / 472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022ஆம் ஆண்டு 31.03.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் திகதி (15.04.2023) இற்கு முன்னர் மீட்கவும் மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத்தவறின் 15.04.2023 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு :-** 2022 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.

**இல. 370, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
021 4900 311,
021 222 5180**

**உரிமையாளர்,
இல.09 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5048**

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்**
**உரிமையாளர் பெயர் - செல்வி நடராசா வசந்தி**
**விண்ணப்பதாரர் பெயர் - செல்வி நடராசா வசந்தி**
**முகவரி - 12/7. பங்களா வீதி, மல்லாகம்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலவலகத்துக்கு உட்பட்ட வட்டாரம் 21. பங்களா வீதியில் ஆதன இல 12/7 இல் அமைத்துள்ள மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "இயட்டியன்" என்ற ஆதனம் உரிமைகோருபவர் காந்தரூபன் வசந்தி என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 19.07.2014 ஆம்திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் சொக்கலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 4905 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 4905 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளில் ஒன்றான 20.08.2008 ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 3009 ஆம் இலக்கத்தில் பங்களாவீதி, மல்லாகத்தில் வசிக்கும் கணபதி நடராசா என்பவரால் வெளியரங்கப்படுத்தி எழுதிக்கொண்ட பிரகடனப்படுத்தல் சாதனத்தில் 1939ம் ஆண்டில் மல்லாகம் நொத்தாரிஸ் அப்பாத்துரை முகதாவில் அவரது மாதா வெள்ளையன் கணபதி பெண் தங்கமுத்து என மறுநாமம் கொண்ட செல்லம்மா பெயரில் நிறைவேறிய அறுதி உறுதியின் படி கொள்வனவும் உரிமையும் ஆட்சியுமாய் இருந்து வந்தது என்றும் அவரது தாயார் வெள்ளையன் கண்பதி பெண் செல்லம்மா உறுதிகள். ஆவணங்கள் ஏதும் எழுதாது காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு பிள்ளையும் சட்டபூர்வ வாரிசுமான தமக்கு வந்து சேர்ந்த மாதாவழி முதுசமும் உரிமையுமாக அறுபது வருடாங்களுக்கு மேலாக நெடுங்காலமாக மாதாவழி முதுசமாக வந்து சேர்ந்த ஆதனத்தை தனது தனிப்பட்ட பாதுகாப்பிலும். பராமரிப்பிலும், ஏகபோக உடமையிலும் பாதுகாத்து வருவதாகவும் மேலும் இவ்வாதனத்தில் வீடு கட்டி. குடும்பமாக வாழ்ந்து வருவதாகவும் இவ்வாதனத்தில் இருந்து வரும் சகல வருமானங்களையும் பிரயோசனங்களையும் தானே ஆண்டு அனுபவித்து வருவதாக உறுதியில் வெளிப்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. மேலும் 1995ம் ஆண்டு இடப்பெயர்வின் போது உறுதிச் சாதனங்கள் காணாமல்போய்விட்டதாகவும் இந்த உறுதிச்சாதனத்தை யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் இருந்து ஓர் அத்தாட்சிப்படுத்திய பிரதியைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளும் பயன் அளிக்கவில்லை என்றும் குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்டு உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம்.வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பிரிவு, மல்லாகம் தெற்கு J/212. கிராம அலுவலர் பிரிவு, மல்லாகம் இறை "இயட்டியன்" நிலப்பரப்பு நான்கு குழி ஏழும் (நில.பர 4 குழி 7) நிரந்தரக்கட்டிடமும் கிணறும் இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு ஒன்று குழி பத்து தசம் ஒன்பது ஐந்தும் (நி.ப. 1 குழி 10.95) வீடும் மேற்கெல்லையில் கிணறும் இது 2014ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி நிலஅளவையாளர் M. சண்முகநாதன் 1290 ம் இலக்கத்தில் தயாரித்த நிலஅளவைப்படத்தில் துண்டு நான்கு (துண்டு 4) எனக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்று குழி பத்து தசம் ஒன்பது ஐந்துக்கும் (நி.ப.1 குழி 10.95) எல்லை கிழக்கு நடராசா பெண் தவமணிக்குரிய ஆதனமும் தங்கவேலாயுதம் பெண் சிவகாமலட்சுமிக்குரிய ஆதனமும் வடக்கு தங்கவேலாயுதம் பெண் சிவகாமலட்சுமிக்குரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை முகப்பும் கிணறும் துண்டு ஐந்து எனக்காட்டப்பட்டுள்ள நன்கொடை கொடுக்கற்காரர் கணபதி நடராசாவுக்குரிய ஆதனமும் தெற்கு சிவராயபிள்ளை மனைவி ஆனந்ததேவிக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும் இதற்குரியவைகளும், இன்னும் இக்காணியில் இருந்து மேற்கெல்லையான பாதை முகப்பால் 2014ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி நிலஅளவையாளர் M. சண்முகநாதன் 1290ம் இலக்கத்தில் தயாரித்த நிலஅளவைப்படத்தில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்டுள்ள குழி நான்கு தசம் ஏழு மூன்று விஸ்தீரணம் கொண்ட பாதையால் குறித்த படத்தில் காட்டியுள்ள படி மேற்கே சென்று பின்பு தெற்கு நோக்கி சென்று பின்பு மேற்கு நோக்கி மேற்கே உள்ள பேரொழுங்கைக்கு போவதற்கு புதிதாக அமைக்கப்பட்ட பாதையில் போக்குவரத்து செய்யும் பாதை பாவிப்புரித்து. இன்னும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய மூன்றில் ஒரு (1/3) பங்கும் அதற்குரியவைகளும்.

மேற்குறித்த ஆதனத்தை நடராசா மகள் வசந்தி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபணையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் நடராசா மகள் வசந்தி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS 23968)4,6

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகம்**
**உரிமையாளர் பெயர் :- பற்குணம் குணரட்ணம் மனைவி தயாநிதி**
**விண்ணப்பதாரர் பெயர் :- திருமதி நடராசா செல்லம்மா**
**முகவரி :- 12/9. பங்களா வீதி, மல்லாகம்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 21. பங்களாவீதியில் ஆதன இல. 12/9 இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "இயட்டியன்" என்ற ஆதனம் உரிமைகோருபவர் கணபதி நடராசா என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 31.07.2014 ஆம்திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் சொக்கலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 4916 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 4916 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளில் ஒன்றான 20.08.2008 ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 3009 ஆம் இலக்கத்தில் பங்களாவீதி, மல்லாகத்தில் வசிக்கும் கணபதி நடராசா என்பவரால் வெளியரங்கப்படுத்தி எழுதிக்கொண்ட பிரகடனப்படுத்தல் சாதனத்தில் 1939ம் ஆண்டில் மல்லாகம் நொத்தாரிஸ் அப்பாத்துரை முகதாவில் அவரது மாதா வெள்ளையன் கணபதி பெண் தங்கமுத்து என மறுநாமம் கொண்ட செல்லம்மா பெயரில் நிறைவேறிய அறுதி உறுதியின்படி கொள்வனவும் உரிமையும் ஆட்சியுமாய் இருந்து வந்தது என்றும் அவரது தாயார் வெள்ளையன் கணபதி பெண் செல்லம்மா உறுதிகள். ஆவணங்கள் ஏதும் எழுதாது காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு பிள்ளையும் சட்டபூர்வ வாரிசுமான தமக்கு வந்து சேர்ந்த மாதாவழி முதுசமும் உரிமையுமாக அறுபது வருடாங்களுக்கு மேலாக நெடுங்காலமாக மாதாவழி முதுசமாக வந்து சேர்ந்த ஆதனத்தை தனது தனிப்பட்ட பாதுகாப்பிலும். பராமரிப்பிலும், ஏகபோக உடமையிலும் பாதுகாத்து வருவதாகவும் மேலும் இவ்வாதனத்தில் வீடு கட்டி, குடும்பமாக வாழ்ந்து வருவதாகவும் இவ்வாதனத்தில் இருந்து வரும் சகல வருமானங்களையும் பிரயோசனங்களையும் தானே ஆண்டு அனுபவித்து வருவதாக உறுதியில் வெளிப்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. மேலும் 1995ம் ஆண்டு இடப்பெயர்வின் போது உறுதிச் சாதனங்கள் காணாமல்போய்விட்டதாகவும் இந்த உறுதிச்சாதனத்தை யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் இருந்து ஓர் அத்தாட்சிப்படுத்திய பிரதியைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளும் பயன் அளிக்கவில்லை என்றும் குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்டு உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு. வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பிரிவு. மல்லாகம் தெற்கு J/212. கிராம அலுவலர் பிரிவு, மல்லாகம் இறை "இயட்டியன்" நிலப்பரப்பு நான்கு குழி ஏழும் (நில.பர 4 குழி 7) நிரந்தரக்கட்டிடமும் கிணறும் இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு ஒன்று குழி பூஜ்ஜியம் நான்கு தசம் எட்டு மூன்றும் வீடும் செய்பயிர் வான் பயிர்களும் இது 2014ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி நில அளவையாளர் M.சண்முகநாதன் அவர்களால் 1290ம் இலக்கத்தில் தயாரித்த நில அளவைப்படத்தில் துண்டு மூன்று எனக்காட்டப்பட்டுள்ளது. இந்த துண்டு மூன்று எனக்காட்டப்படுள்ள நிலப்ரப்பு ஒன்று குழி பூஜ்ஜியம் நான்கு தசம் எட்டு மூன்றுக்கும் எல்லை கிழக்கு குறித்த 1290 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு ஐந்து (துண்டு 5) எனக்காட்டப்பட்டுள்ள தற்பொழுது நடராசா நந்தகுமாருக்குரிய ஆதனம் வடக்கு குறித்த நில அளைவைப்படத்தில் துண்டு இரண்டு (துண்டு2) எனக்காட்டப்பட்டுள்ள புதிதாக அமைக்கப்பட்ட பாதை நிலம் மேற்கு குறித்த படத்தில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்டுள்ள புதிதாக அமைப்பட்ட பாதை நிலமும் ஒழுங்கையும் தெற்கு சிவராஜபிள்ளை மனைவி ஆனந்ததேவிக்குரிய ஆதனம் இவ்வெல்லைப்படி இடதடங்கலும் இதற்குரியவைகளும். இன்னும் துண்டு ஐந்து எனக்காட்டப்பட்டுள்ள கிழக்கெல்லை ஆதனத்தின் கிழக்கெல்லையிலுள்ள கிணற்றில் இதற்குரிய மூன்றில் ஒரு பங்கும் (1/3) குறித்த துண்டு இரண்டு எனக்காட்டப்பட்டுள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள நான்கு தசம் ஏழு மூன்று விஸ்தீரணம் கொண்ட பாதையாலும் குறித்த பாதையில் இருந்து கிழக்கெல்லை காணியின் கிழக்கெல்லையோரமாக குறித்த கிணற்டிக்குச் செல்லும் வழிவாய்க்காலிலும் பாவிப்புரித்தும் இன்னும் குறித்த துண்டு இரண்டு எனக்காட்டப்பட்டுள்ள பாதையால் மேற்கே உள்ள ஒழுங்கைக்கு போக்குவரத்து செய்யும் பாதை பாவிப்புரித்து.

மேற்குறித்த ஆதனத்தை பற்குணம் குணரட்ணம் மனைவி தயாநிதி என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபணையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பற்குணம் குணரத்தினம் மனைவி தயாநிதி பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை
(கொல்லங்கலட்டி)**

(cs 23968) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - **2021** (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் மற்றும் இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - **2021** (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் மே மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி **31.03.2023** (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**உதவிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
**14.03.2023**

(cr.39445) (2.3)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்
## பணிநிலை வெற்றிடம்

**எமது சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. பதவி / சம்பள அளவுத்திட்டம்**

i. **கிராமிய வங்கி எழுதுநர் 300/14** — வெற்றிடம்-01
17900-155X10-165X10-21100 (02/2022 இன் படி)

ii. **களஞ்சிய முகாமையாளர் 208/13** — வெற்றிடம்-07
18360-160X10-170X10-21660 (02/2022 இன் படி)

iii. **எரிபொருள் நிரப்புனர் 313/16** — வெற்றிடம்-04
16975-135X10-150X10-19825 (02/2022 இன் படி)

iv. **காவலாளி 315/16** — வெற்றிடம்-01
16975-135X10-150X10-19825 (02/2022 இன் படி)

v. **அலுவலக சேவகர் 317/16** — வெற்றிடம்-01
16975-135X10-150X10-19825 (02/2022 இன் படி)

❖ **குறிப்பு:-** கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைய மேற்படி பதவிகளுக்கு ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**02. தகைமைகள்- (சுற்று நிருபம் 01/2021)**

**கிராமிய வங்கி எழுதுநர் 300/14**

அ. I. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் 2 வருட அனுபவம் அத்துடன் கணினியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப் படுத்தும் அனுபவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். / கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் எழுதுநர் பதவியில் 04 வருட அனுபவம் அத்துடன் கணினியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

II. கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் கணினிப்பக்க உருவாக்குநர் பதவியில் 02 வருட அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் கணினிப்பக்க உருவாக்குநர் பதவியில் 04 வருட அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சை யில் தமிழ் கணிதம் உட்பட 06 பாட சித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களுக்குக் குறையாத MS Office கற்கை நெறி / அதனை ஒத்த கணினி கற்கை நெறியினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அ) பிரிவு அல்லது (ஆ) பிரிவு தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**களஞ்சிய முகாமையாளர் 208/13**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். /கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

**எரிபொருள் நிரப்புனர் 313/16**

அ) கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப் பத்திரம் / 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**காவலாளி 315/16**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) 05ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**அலுவலக சேவகர் 317/16**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

**03. நியந்தனைகள்:-**

1. வயதெல்லை 18-45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பபடிவம் அனுப்பப்பட வேண்டும்.
3. விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக துறை சார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியனவற்றின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்ட திட்டங்களுக்கமைய உரிய பிணையினை செலுத்துதல் வேண்டும்.

❖ **விண்ணப்பிக்கும் முறை:-** மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்டு மேல் கூறப்பட்ட பிரதிகளை இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான பெயரினை குறிப்பிட்டு **"தலைவர் தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) [illegible] கொடிகாமம்"** எனும் முகவரிக்கு 30.03.2023 திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**15.03.2023** **தலைவர்**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 80 ரூபாய்

**077 334 1281**

## சமையலாள் தேவை

6 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் தங்கி இருந்து சமைக்கக் கூடிய சமையலாள் ஒருவர் தேவை.
கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**077 120 9998**

## வாடகைக்கு

அரைக்கும் ஆலை (Grinding Mill) வாடகைக்கு (குத்தகைக்கு) விடப்படும்.
தொடர்பு: **076 904 4235**

## வேலைவாய்ப்புக்கள்

அனுபவமிக்க மேற்பார்வையாளர், கிளீனர், ரூம்போய், சமையல் உதவியாளர் உட்பட சகல பணிகளுக்கும் உடனடி வேலை வாய்ப்பு. நேர்முகத் தேர்வு. கவர்ச்சிகரமான சம்பளம். தொடர்பு:

**முகாமையாளர்**
**ஞானம்ஸ் ஹோட்டல் & ரெஸ்ரோரன்ஸ்**
**யாழ்ப்பாணம்.**
**07044 96 525**

## Vacancy-Teachers

**Vacancy exists in a reputed school in Jaffna District for the following posts:**

* Mathematics teacher-Secondary School ( Full time)
* Mathematics teacher-Secondary School (Part time -Temporary)
* Information and Communication Technology(ICT)(Full Time)

**Qualifications:**

* Bachelors' Degree from a recognized university with minimum two years' experience.
* Ability to teach in Tamil and English media essential.
* Age below 35 years.
* Female teachers preferred.

Please email your Bio Data to forvacancyadvertiser@gmail.com on or before Tuesday 21 st March.

(cs 23970) (2.6)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகம்**

| | | |
|---|---|---|
| **உரிமையாளர் பெயர்** | :- | **திரு. நடராசா நந்தகுமார்** |
| **விண்ணப்பதாரர் பெயர்** | :- | **திரு. நடராசா நந்தகுமார்** |
| **முகவரி** | :- | **12/8. பங்களா வீதி, மல்லாகம்** |

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 21. பங்களாவீதியில் ஆதன இல 12/8 இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "இயட்டியன்" என்ற ஆதனம் உரிமைகோருபவர் நடராசா நந்தகுமார் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 31.07.2014 ஆம்திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸ் சொக்கலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 4915 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 4915 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளில் ஒன்றான 20.08.2008 ஆந் திகதிய சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 3009 ஆம் இலக்கத்தில் பங்களாவீதி, மல்லாகத்தில் வசிக்கும் கணபதி நடராசா என்பவரால் வெளியரங்கப்படுத்தி எழுதிக்கொண்ட பிரகடனப்படுத்தல் சாதனத்தில் 1939ம் ஆண்டில் மல்லாகம் நொத்தாரிஸ் அப்பாத்துரை முகதாவில் அவரது மாதா வெள்ளையன் கணபதி பெண் தங்கமுத்து என மறுநாமம் கொண்ட செல்லம்மா பெயரில் நிறைவேறிய அறுதி உறுதியின்படி கொள்வனவும் உரிமையும் ஆட்சியுமாய் இருந்து வந்தது என்றும் அவரது தாயார் வெள்ளையன் கணபதி பெண் செல்லம்மா உறுதிகள். ஆவணங்கள் ஏதும் எழுதாது காலஞ்சென்றதும் அவரின் ஒரே ஒரு பிள்ளையும் சட்டபூர்வ வாரிசுமான தமக்கு வந்து சேர்ந்த மாதாவழி முதுசமும் உரிமையுமாக அறுபது வருடங்களுக்கு மேலாக நெடுங்காலமாக மாதாவழி முதுசமாக வந்து சேர்ந்த ஆதனத்தை தனது தனிப்பட்ட பாதுகாப்பிலும், பராமரிப்பிலும், ஏகபோக உடமையிலும் பாதுகாத்து வருவதாகவும் மேலும் இவ்வாதனத்தில் வீடு கட்டி, குடும்பமாக வாழ்ந்து வருவதாகவும் இவ்வாதனத்தில் இருந்து வரும் சகல வருமானங்களையும் பிரயோசனங்களையும் தானே ஆண்டு அனுபவித்து வருவதாக உறுதியில் வெளிப்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. மேலும் 1995ம் ஆண்டு இடப்பெயர்வின் போது உறுதிச் சாதனங்கள் காணாமல்போய்விட்டதாகவும் இந்த உறுதிச்சாதனத்தை யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் இருந்து ஓர் அத்தாட்சிப்படுத்திய பிரதியைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளும் பயன் அளிக்கவில்லை என்றும் குறித்த உறுதியில் குறிப்பிடப்பட்டு உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பிரிவு, மல்லாகம் தெற்கு J/212. கிராம அலுவலர் பிரிவு, மல்லாகம் இறை "இயட்டியன்" நிலப்பரப்பு நான்கு குழி ஏழும் (நில.பர 4 குழி 7) நிரந்தரக்கட்டிடமும் கிணறும் இதில் நடுப்பெற நிலப்பரப்பு குழி பதினாறு தசம் ஏழு ஒன்பது கிழக்கெல்லையில் கிணறும் இது 2014ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி நில அளவையாளர் M.சண்முகநாதன் அவர்களால் 1290ம் இலக்கத்தில் தயாரித்த நில அளவைப்படத்தில் துண்டு ஐந்து எனக்காட்டப்பட்டுள்ளது. இந்த குழி பதினாறு தசம் ஏழு ஒன்பதுக்கும் எல்லை கிழக்கு குறித்த 1290ம் இலக்க நில அளவைபடத்தில் துண்டு நான்கு எனக்காட்டப்பட்டுள்ள தற்பொழுது கணபதி நடராசா மகள் வசந்திக்குரிய ஆதனமும் கிணறும் தூர்வை நிலமும் வடக்கு குறித்த படத்தில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்டுள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதை நிலம் மேற்கு குறித்த படத்தில் துண்டு 3எனக்காட்டப்பட்டுள்ள குறித்த நன்கொடை கொடுக்கற்காரர்களான கணபதி நடராசாவுக்கும் மனைவி செல்லம்மாவுக்குரிய ஆதனம் தெற்கு சிவராஜபிள்ளை மனைவி ஆனந்ததேவிக்குரிய ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்களிற் இதன் கிழக்கெல்லையோரமாக வடக்கெல்லையான பாதையில் இருந்து குறித்த கிணற்றடிக்கு வரும் வழிவாய்க்கால் பாதையில் மேற்கெல்லையான துண்டு 3 எனக்காட்டப்பட்டுள்ள மிகுதி ஆதனத்திற்குரிய பாவிப்புரித்து புறநீங்களாக மிகுதி யாவும் இதற்குரியவைகளும், இன்னும் 1290ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்டுள்ளது. குழி நான்கு தசம் ஏழு மூன்று விஸ்தீரணம் கொண்ட பாதையால் குறித்த படத்தில் காட்டியுள்ளபடி மேற்கே சென்று பின்பு தெற்கு நோக்கி வந்து பின்பு மேற்கு நோக்கி மேற்கே உள்ள பேரொழுங்கைக்கு போவதற்கு புதிதாக அமைக்கப்பட்ட பாதையில் போக்குவரத்து செய்யும் பாதை பாவிப்புரித்து

மேற்குறித்த ஆதனத்தை நடராசா நந்தகுமார் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபணையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் நடராசா நந்தகுமார் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை**
**(கொல்லங்கலட்டி)**

(cs 23968) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச்சீட்டு அச்சிட நிதி: திறைசேரி கள்ளமௌனம்!

கொழும்பு, மார்ச் 15

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளுக்குத் தேவையான நிதியை வழங்கவேண்டும் என்று திறைசேரியிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. இந்த வாரத்துக்குள் 200 மில்லியன் ரூபா முற்பணம் கிடைக்காவிட்டால் உரிய தினத்தில் வாக்குச்சீட்டுக்களை வழங்கமுடியாது என்று அரச அச்சகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச அச்சகத் திணைக்களம் தபால்மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுக்களை நாளை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்காவிட்டால் திட்டமிட்ட வகையில் தபால் மூல வாக்கெடுப்பை நடத்துவதில் சிக்கல் ஏற்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மார்ச் மாதம் 9ஆம் திகதி நடத்தும் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்கு மட்டும் 200 மில்லியன் ரூபா செலவாகியுள்ள நிலையில் திறைசேரி 40 மில்லியன் ரூபாவை மாத்திரம் வழங்கியுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டு அச்சிடல் உட்பட ஏனைய பணிகளுக்கு மாத்திரம் 500 மில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தநிலையில், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளுக்குத் தேவையான நிதியை வழங்கவேண்டும் என்று அரச அச்சகத் திணைக்களம் கடந்த 8ஆம் திகதி திறைசேரிக்கு அனுப்பிய கடிதத்துக்கு நேற்றுமுன்தினம் வரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

தபால்மூல வாக்குச்சீட்டுக்கள் நாளை புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும் என்று அரச அச்சகம் முன்னதாகக் கூறியிருந்தது. ஆயினும் நிதி கிடைக்காததால் அது பெரும்பாலும் சாத்தியம் இல்லை என்று கூறப்படுகின்றது. இருவாரத்துக்குள் தபால் மூல வாக்குச்சீட்டுக்களை தபால் மூலமாக விநியோகிப்பதற்குத் தபால் திணைக்களத்துக்கு ஆணைக்குழு ஒப்படைக்க வேண்டும். வாக்குச்சீட்டுக்களை விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் நிறைவுபெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)




## போதைப்பாவனையைத் தடுக்க பொது அமைப்புகள் நடவடிக்கை

வவுனியா, மார்ச் 15

வவுனியா பூந்தோட்டம் பகுதிகளை அண்மித்த கிராமங்களுக்குள் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளன.

பூந்தோட்டம், பெரியார்குளம், சிறிநகர், மதீனாநகர், மகாறம்பைக்குளம், அண்ணாநகர் போன்ற கிராமங்களுக்குள் போதைப்பொருள் பாவனையின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன், சிறுவர்களை இலக்குவைத்து இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் கலாசாரச் சீரழிவுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கிராமங்களைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளன.

இதுதொடர்பாக நீதிவான், மாவட்டச்செயலர், பிரதி பொலிஸ்மா அதிபர், பிரதேசசெயலர், விசேட அதிரடிப்படை, மதுவரித்திணைக்களம் ஆகிய தரப்புகளுக்கு உடனடியாக தெரியப்படுத்தி விரைவான நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்துவது என்று அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலைகள், தனியார் கல்விநிலையங்களில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-14,110)

## போதைப்பாவனையைத் தடுக்க மாணவர்களுக்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள், சிறுவர் துஷ்பிரயோகம், மகிழ்ச்சியான குடும்பம், சிறுவர் கடமைகள் தொடர்பான விழிப்புணர்வு, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தி யோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினர். (எ-14,66)



## மின்கட்டணத்துக்கு எதிராக யாழில் சுவரொட்டிகள்



அரசாங்கத்தால் அண்மையில் அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்துக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் யாழ்ப்பாண நகரை அண்டிய பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்களமொழிகளில் "அதிகரிக்கப்பட்ட மின்கட்டணத்தைச் செலுத்த முடியாது! செலுத்த மாட்டோம்! " என்ற வாசகம் எழுதப்பட்ட சுவரொட்டிகள் முன்னிலை சோசலிஸக் கட்சியால் ஒட்டப்பட்டுள்ளன. (எ-14,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணக் கல்வி அதிகாரத்தை மீட்கும் போராட்டம் தொடரும்

## கலாநிதி சர்வேஸ்வரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 15**

**மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக்கும் எண்ணத்தில் இருந்து அரசாங்கம் சற்றுப் பின்வாங்கியுள்ள நிலையில் முழுமையாக அந்தத் திட்டத்தைக் கைவிடும் வரை நீதிமன்ற சட்டப் போராட்டம் தொடரும் என வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ். ஊடக அமையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட கல்வி அதிகாரங்களை சட்டவிரோதமான முறையில் மத்திய அரசாங்கம் பறித்தமைக்கு எதிராக நான் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்தவருடம் வழக்குத் தொடுத்தேன். இலங்கை அரசமைப்பில் வழங்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளின் பல அதிகாரங்களை மத்திய அரசாங்கம் சட்ட விரோதமான முறையில் பறித்துள்ளது.

கல்வி, விவசாயம், சுகாதாரம் ஆகிய துறைகள் சார்ந்து மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மாகாண நியதிச் சட்டங்களையும் மீறும் வகையில் பல விடயங்களை மத்திய அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

குறிப்பாக மாகாணக் கல்வி அமைச்சை எடுத்துக் கொண்டால் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தேசியப் பாடசாலைகள், ஆயுதப் படைகளின் பிள்ளைகள் கற்கும் பாடசாலைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாகாணப் பாடசாலைகளாக வரையறுக்கப்பட்டன.

வடக்கு கல்வி அமைச்சில் 19 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக இருந்த நிலையில் மாகாணக் கல்வி அமைச்சின் கீழே இருந்த மூன்று பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாற்றப்பட்டு 22 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்தில் இலங்கையில் ஆயிரம் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக்கும் திட்டத்தின் கீழ் வடக்கில் 51 பாடசாலைகளை தேசியப் பாடசாலையாக்கும் முயற்சிகள் இடம்பெற்றன.

மாகாணப் பாடசாலைகளைப் பறிக்கும் முயற்சிக்கு எதிராக தமிழ்த் தேசியத்தின்பால் பயணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உரிய அக்கறை காட்டாத நிலையில், கடந்தவருடம் ஓகஸ்ட் மாதம் இதற்கு எதிராக வழக்குத் தொடுத்தேன். கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் அரச தரப்பு சார்ந்து 16 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டனர். வழக்கானது கடந்த 8 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் சகலருக்கும் நீதிமன்றம் ஆணை அனுப்பியது. இதன் விளைவாக தற்போது பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக்கும் முயற்சிகள் சிறிது பின்வாங்கப்படுகின்றன. இந்த சட்டப் போராட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம் - என்றார். (ம-20)

## நூல்கள் அறிமுகம்

முல்லைத்தீவு, மார்ச் 15

விசுவமடு மத்திய சனசமூக நிலையத்துடன் காலையடி மறுமலர்ச்சி மன்றம் இணைந்து நடத்தும் நான்கு நூல்களின் அறிமுகமும் நாடக நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு விசுவமடு மத்திய சனசமூக நிலைய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமனின் 'பறையொலி', நாடக ஆசிரியரும் நெறியாளருமான பு.கணேசராஜாவின் 'பொறுப்பது உன் விதியோ?', அழ.பகீரதனின் 'மறுமலர்ச்சி', யோ.புரட்சியின் 'சேதி சொல்லும் சின்னப்பாட்டு' ஆகிய நான்கு நூல்களே அறிமுகம் செய்யப்படவுள்ளன.

நூல்கள் அறிமுக உரையை கவிஞர் வி. அபிவர்ணா, எழுத்தாளர் யோ.புரட்சி, கவிஞரும் ஆசிரியருமான த.செல்வா, எழுத்தாளரும் அறிவிப்பாளருமான கலாபூஷணம் ந.இராமநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சண் நாடகக் குழுவினின் தயாரிப்பில் பு.கணேசராஜாவின் நெறியாள்கையில் உருவான 'அரோகரா' மற்றும் 'காதலுக்கு மருந்து' ஆகிய நகைச்சுவை நாடகங்களும் இடம்பெறவுள்ளன. மேலும் பாரி அறக்கட்டளையின் அனுசரணையுடன் பொருண்மியம் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு 'பாரி சுயகற்றல் ஏடு' நூல்களும் வழங்கப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-14)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்** : எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத் தேவையான பணம் கிடைத்துவிடும். நண்பர்களுக்காக செல்வு செய்யவேண்டி வரும். உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** காரியங்கள் அனுகூலமாகும். செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்களால் வீட்டில் பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு. குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும்.

**விருச்சிகம்** : எடுதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் . பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். அவசியத் தேவைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கும்பம்:** வீட்டில் உற்சாகமும் கலகலப்புமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உடல்ஆரோக்கியத்தில்கவனம்தேவை. வீண்அலைச்சலை தவிர்க்கவும்.

**மீனம்:** எதிலும் நிதானமாகச் செயற்படவும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும்.



## மாட்டுவண்டிச் சவாரி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மாவட்ட ரீதியிலான மாட்டுவண்டிச் சவாரி அராலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. போட்டியில் 68 மாட்டுவண்டிகள் பங்குபற்றின. இதில் ஏ, பி, சி ஆகிய மூன்று பிரிவுகளிலும் சங்குவேலியைச் சேர்ந்த கேமச்சந்திரனின் மாடுகள் முதலிடம் பெற்றன. டி பிரிவில் அளவெட்டி பகுதியைச் சேர்ந்த அஞ்சலோவின் மாடுகள் முதலிடம் பெற்றன. ஈ பிரிவில் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த கிருபாவின் மாடுகள் முதலிடம் பெற்றன. வட்டுக்கோட்டை இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு போட்டியைப் பார்வையிட்டனர். (ம-14,20)

## மணல் கடத்தல் பொலிஸார் முறியடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 15

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனமொன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதன் சாரதி தப்பியோடியுள்ளார்.

யாழ்ப்பாணம் பலாலி பிரதான வீதியில் வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சோதனை நடவடிக்கையின்போதே இந்த டிப்பர் கைப்பற்றப்பட்டுள்ளது.

தப்பிச்சென்ற சாரதியைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரினின் கருத்தால் சீற்றத்தில் மாலைதீவு!



கொழும்பு, மார்ச் 15

மாலைதீவின் சுற்றுலாத்தலங்களுக்கு எதிராக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்த சர்ச்சைக் கருத்தையடுத்து, இலங்கைக்கு எதிராக மாலைதீவு கடும் சீற்றமடைந்துள்ளது. இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான 'சுற்றுலாவை மையப்படுத்திய உறவில்' அவரின் இந்தக் கருத்துக்கள் விரிசலை ஏற்படுத்தும் என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜேர்மனியின் தலைநகர் பேர்ளினில் உலக சுற்றுலா மாநாடு அண்மையில் இடம்பெற்றது. இதில் இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில்; 'இப்போது சிலர் மாலைதீவுக்குச் செல்கின்றனர். மாலைதீவில் என்ன இருக்கின்றது? ஆள்களற்ற தீவுகளில் தங்கமுடியும். இதனால், இறுதியில் ஒரு விரக்தி ஏற்படும். ஆனால், இலங்கை அவ்வாறில்லை' என்று தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்துக்கு மாலைதீவு அமைச்சர்களும் மாலைதீவு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

'மாலைதீவு கடந்த மூன்று வருடங்களாக உலகின் முன்னணி சுற்றுலா மையங்களுள் ஒன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. நான் இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சரை மாலைதீவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறேன். உங்களுக்குத் தேவையான நேரத்தை எடுத்து, எமது சர்வதேசத்தரம் வாய்ந்த உபசரிப்பையும், வெள்ளை மணல் கடற்கரையையும், நீலக்கடலையும் பார்வையிடுங்கள்' - என்று மாலைதீவு நாடாளுமன்ற உறுப்பினர் மொகமட் ஷிபாவ் தனது ருவிற்றரில் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு சுற்றுலாத்துறை அமைச்சர் அப்துல்லா மௌசூம், ஹரினின் கருத்துக்குக் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார். '2021, 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் மாலைதீவு சர்வதேச தரவரிசையில் சிறந்த சுற்றுலாத்துறை நாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் அமைச்சருக்குப் பொறாமையாக இருந்தால் அவர் கண்ணாடிக்கு முன்நின்று ஒருமுறை பார்க்கட்டும்' என்றுதனது ருவிற்றரில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த எதிர்ப்புக்களையடுத்து, தனது கருத்துக்காக அமைச்சர் ஹரின் மன்னிப்புக்கோரியுள்ளார். மாலைதீவை தவறாகக் குறிப்பிடும் நோக்கத்தில் அவ்வாறு தெரிவிக்கவில்லை என்று ஹரின் தெரிவித்துள்ளார். (அ-ம,6)

## அரசாங்கத்துக்கு...

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமை, நியாயமற்ற வரிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டமை, கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படாமை, மருத்துவ நெருக்கடியைத் தீர்க்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அரசாங்கத்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் முதல் தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்த இந்தப் போராட்டம் தற்போது தீவிரமடைந்துள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட முதன்மைத் தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்துக்கு தமது ஆதரவைத் தெரிவித்ததுடன் இன்றையதினம் கவனவீர்ப்புப் போராட்டங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளன. இதனால், இன்றையதினம் இலங்கையின் பல பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கை நெருக்கடிக்கு உள்ளாகும் என்று கருதப்படுகின்றது. குறிப்பாக கல்வி, தபால், சுகாதாரத் துறைகள் முற்றாக முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இன்று மு.ப. 10 மணியளவில் இலங்கை ஆசிரியர் சங்கத்தால் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியிலும் போராட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

(அ-ம-66,110)

## ஜன்னல்...

ஒன்றில் நேற்றுக்காலை ஜன்னல் உடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளன. வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து ஜன்னல் கம்பியை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நகைகள் மற்றும் வெள்ளிப்பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம.23)

## ஏப்ரல் 25 ஆம்...

பெர்னாண்டோ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'உள்ளூராட்சித் தேர்தலால் இந்த நாட்டில் எந்தவொரு மாற்றமும் ஏற்படப்போவதில்லை. தேர்தல் நடைபெறும் என்றபோதிலும் அது ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறுமா என்பது சந்தேகமே. அந்த நாளில் தேர்தல் நடக்காது என்பதே எனது உறுதியான கருத்து. தேர்தலை விடவும் முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன. அவை தொடர்பிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. தேர்தலை விடவும் மக்களுக்கு உணவு மற்றும் சுகாதாரத் தேவைகளே அவசியம். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்த பின்னரே அமைச்சரவை மாற்றம் இடம்பெறும். அமைச்சரவை மாற்றத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பலரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள்' - என்றார். (அ-ம-44)

## பணிப்புறக்கணிப்பில்...

துள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கையை மீளப்பெறுமாறு வலியுறுத்தியும், மேலும் பல கோரிக்கைகளை முன்வைத்தும் 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முடிவெடுத்துள்ளன. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:-

கடந்த வாரமும் நாடு முற்றாக முடங்கும் என தொழிற்சங்கங்கள் அறிவித்த போதிலும் அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. அரசாங்கம் பெரும்பாடுபட்டு தடையின்றி மின் விநியோகத்தை வழங்கியுள்ளது. எரிபொருள், எரிவாயு என்பன தட்டுப்பாடின்றி வழங்கப்படுகின்றன. இதனை தடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு இடமளித்து விடக்கூடாது என்பதற்காக அரசாங்கத்தால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு அத்தியாவசியமான போக்குவரத்து, துறைமுகம், தபால், மின்சாரம் உள்ளிட்ட அனைத்தும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய நாட்டின் பொதுச்சட்டத்தை மீறினால் அது தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை என்பது தொடர்பில் சட்டம் மீறப்பட்டதன் பின்னர் தீர்மானிக்கப்படும். வங்கி வட்டி வீதங்கள் தொடர்பான தீர்மானங்களில் [illegible] தலையிட முடியாது [illegible] அதிகாரம் மத்திய வங்கியிடம் மாத்திரமே காணப்படுகிறது. அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் எவ்வித அதிகாரமும் இல்லை. எனவே அதிகாரமற்ற ஒரு விடயத்தைச் செய்யுமாறு அழுத்தம் வழங்குவது பயனற்றது.

பொருளாதார நிலைமைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் பணவீக்கம் வீழ்ச்சியடைந்தால், வங்கிகளின் வட்டி வீதங்களும் தானாகவே வீழ்ச்சியடையும். தற்போது பணவீக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகிறது. அதற்கமைய வங்கிகளின் வட்டி வீதங்களும் கட்டுப்படுத்தப்படும். கடன் மறுசீரமைப்பு, நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு குறித்த சாதகமான சமிக்ஞையின் பிரதிபலனே இவையாகும்.

அத்தோடு சுமார் 5 ஆயிரம் மில்லியன் டொலர் வங்கி முறைமையூடாக நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதனால் ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. எனவே டொலரின் பெறுமதி 300 ரூபாவை விடக் குறைவடைந்தால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளும் பெரியளவில் குறைவடையும் - என்றார். (அ-ம)

## போராட்டத்துக்கு...

தில் ஈடுபடமுடியும், ஆனால், நாட்கூலி பெறும் தரப்பினரால் போராட்டத்தில் ஈடுபடமுடியாது - என்று இலங்கைத் தனியார் பேருந்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தனியார் பேருந்து சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்ததாவது:-

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை. மாத வருமானம் பெறும் அரச ஊழியர்களால் போராட்டத்தில் ஈடுபடமுடியும், ஆனால், நாட்கூலி பெறும் தரப்பினரால் போராட்டத்தில் ஈடுபடமுடியாது.

புகையிரத தொழிற்சங்கத்தினரது பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் பொதுப்போக்குவரத்துச் சேவை முழுமையாக முடங்காது. பாடசாலைகள், அலுவலகங்கள் உட்பட பொதுச் சேவைகள் அனைத்தும் வழமைபோல் இடம்பெறும்.

கொவிட் பெருந்தொற்று மற்றும் எரிபொருள் பற்றாக்குறை ஆகிய பிரச்சினைகளில் இருந்து தற்போதுதான் தனியார் பேருந்து தொழிற்றுறை உயிர்பெற்றுள்ளது. தற்போது நாங்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டால் அடுத்த மாதம் புத்தாண்டுக் காலத்தில் யாசகம் எடுக்க நேரிடும். ஆகவே இந்தக் காலங்களில் வழமைக்கு மாறாக அதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவோம் - என்றார். (அ-ம)

## தொழிற்சங்க...

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகள் நேற்றையதினம் முடங்கின. அரசாங்கத்தின் முறையற்ற வரிக்கொள்கையைக் கண்டித்தும், மருத்துவப் பெருநெருக்கடியைப் போக்குமாறு வலியுறுத்தியும் மருத்துவத்துறையினர் நேற்றுமுன்தினம் தொடக்கம் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. வடக்கிலுள்ள பெரும்பாலான மருத்துவமனைகளில் நேற்றையதினம் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனால், நூற்றுக்கணக்கான மக்கள் தமது மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் திரும்பிச் சென்றனர். அவசரமான சிகிச்சைகளும், அவசர சத்திர சிகிச்சைகளும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.

(அ-ம.26,110,66,113)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை 1 இலட்சம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
076 755 8606
074 318 7263

(CS 23979)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் 21.07.1967

# மரண அறிவித்தல்

மறைவு 14.03.2023



## திரு. பாலசந்திரன் (பிரசாத்) பாஸ்கரன்

### (B.P. பாஸ்கரன் எடிசன் கல்வி நிலையம் - அதிபரும், ஸ்தாபகரும்)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், 539 A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பாலசந்திரன் (பிரசாத்) பாஸ்கரன் நேற்று (14.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பாலசந்திரன் பிரசாத் - இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், கனகரத்தினம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அமிழ்தினியின் அன்புக் கணவரும், அஷ்வினியின் அன்புத் தந்தையும், குமாரசாமி மீனாட்சி அவர்களின் அன்புப் பேரனும், சுதாகரன் (சிறி - கனடா), சசிகரன் (கனடா), சசிகலா (கனடா), சதீஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தமயந்தி, மஞ்சுளா, நெடுமாறன், தர்சினி, சிங்காரவேலன், அருணா, அனுசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலமுரளி, நளாயினி, அலகறாஜா ஆகியோரின் அன்பு சகலனும், தர்சிகன், சாருஜன், கனீஷ், சதுர்சன், விருசன், சுஜீவன், அமிதா, தியாரா, சாயிரா, அக்ஷரா ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும், கீர்த்திவர்மன், அபிலாஷ், அபிசேக் ஆகியோரின் அன்பு மாமாவும், குமாரசாமி கங்கைவேணியன் (வேணி) (வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2023) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, **பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் கல்வி நிலையத்தில் இருந்து** கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| சித்தப்பா | பரமநாதன் | 070 222 2911 |
| | | 001 416 554 0911 |
| சகலன் | பாலமுரளி | 905 409 0932 |
| மைத்துனர் | அன்ரன் | 076 046 6709 |
| மாமா | கு.கங்கைவேணியன் | 077 161 1865 |
| தம்பி | சதீஸ்கரன் | 001 416 828 7081 |
| மைத்துனர் | நெடுமாறன் | 006 147 502 9112 |

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**539A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(cs.23974) (2.6)

## நிர்வாகம் தெரிவு

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் நிர்வாகத் தெரிவு வணிகர் மன்றக் காரியாலயத்தில் மன்றத் தலைவர் சு. அருணாசலம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. தலைவராக சு.அருணாசலம், செயலாளராக க.புஸ்பகாந்தன், பொருளாளராக வி.விஜிதன், உபதலைவராக க.வேதகீதன், உப செயலாளராக எஸ். கஜேந்திரன் ஆகியோரும் உறுப்பினர்களாக சி.அருளம்பலம், சு.அருட்பிரகாசம், பொ.பற்குணசீலன், க.குணரத்தினம், அ.கலைச்செல்வன், யோ.விஜிதரன், யோ.துசியந்தன், க.சந்திரகுமார் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ம-14,159)


## அறை வாடகைக்கு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய அறை தொழில் புரியும் பெண்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

(CR/39443)4,6

076 419 2934, +65 9834 0600

## காணி விற்பனைக்கு

நிருவத்தம்பை ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் (வேலகாடு சந்தி) நிலப்பரப்பு 4 குளி 00.42 பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட தனி வெட்டுக் கிணற்று நீர்ப்பாசன வசதியுடன் உள்ள காணி விற்பனைக்குண்டு.

(CS/23971)4,6

076 424 4031,077 522 3474

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

070 356 7811

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு.
**K.K.S.** வீதியில் இருந்து இரண்டாவது காணி.
தாவடி சந்தியிலிருந்து 100 M தூரத்தில்.

தொடர்பு:- 076 43 65 814

(CS 23977)1-6

## வீடு வாடகைக்குத் தேவை

பிரபல நிறுவனமொன்றிற்கு விசாலமான வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
(யாழ். நகரிலிருந்து **10 KM** உட்பட்டதாக இருத்தல் வேண்டும்).

தொடர்பு: 077 120 9998

DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

**சகல நாடுகளுக்கும் கடிதங்கள்**
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28 / குறிப்பு: வேலையாட்கள் தேவை.

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு Point Pedro வீதியில் இருந்து 200M தூரத்தில் டச் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 60 111 35




## மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் பங்குனித் திங்கள் பொங்கல் 2023

**அம்பிகை அடியார்களே!**

சுபகிருது வருஷ பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் **20-03-2023, 27-03-2023, 03-04-2023, 10-04-2023** ஆகிய திங்கட்கிழமைகளில் இடம்பெறவுள்ளது. பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவமானது பகல், இரவு திருவிழாவாக இடம்பெறுவதுடன் 3ஆம் திங்கள் இரவு கைலாசவாகனத் திருவிழாவும் 4ஆம் திங்கள் இரவு திருமஞ்சத் திருவிழாவும் இடம்பெறும். பக்தர்கள் தமது பொங்கல் வழிபாடு நேர்த்திக் கடன்களை அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை நிறைவேற்றிகொள்ளலாம்.

உற்சவகால தற்காலிக கடைகள் 18-03-2023 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலய வடக்கு பக்க காணியில் வழங்கப்படும். சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வியாபாரம் செய்யவேண்டும் என்பதுடன் குறித்த தினத்தில் தமக்கான வியாபார இடத்துக்கான முழுப்பணத்தையும் செலுத்தி அனுமதியை பெற்றுகொள்ளலாம்.

ஆலயத்தின் பெயரால் நிதி பொருள் என்பன சேகரிப்பதற்கு உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ எவருக்கும் அனுமதிவழங்கப்படவில்லை ஆலய அலுவலகத்தில் மாத்திரம் கையளித்து பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவும்.

**சிவ. பஞ்சாட்சரம்**
**தர்மகர்த்தா**
**021 373 5259**

(CS 23881)4,6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.